குமுறவுரகனு நெளியநீ

(* * * *)

திலதமணி திருநுதற் பரமசிவனிட மருவு
தேவியருள் ஞானமணியே
சித்திரநட[ந]ச் சிறை மயிற்பரி நடத்திய
திருத்தணி மலைக்குமரனே. (ய)

மறையாக மாதிபல கலைவாழி மூவுலகும்
வாழி யந்தணர்கள்வாழி
மன்னர் செங்கோனெறி வழாதுவாழி தொண்(டை)ட
வளநாடு மிகவும்வாழி
பிறைத[வி](வ)ழ் திருத்தணிகை மலையு[ம்] நதிகளுமேவும்
பெரியோர்கள் பலரும்வாழி
பிரசமொழி வள்ளி தெய்வானை திருமங்கலியம்
பெருகொளி சிறந்துவாழி
நறிய செங்கழுநீர் விநாயகன் பதம்வாழி
நடனமா மயிலும்வாழி
ஞானவடி வேல்வாழி குக்[கி](கு)டக் கொடிவாழி
நன்னீப மாலைவாழி
உறுதுணைய ஞபற்[ச] சகாய கணபதிவாழி
யுமைவாழி யரனும்வாழி
ஒளிமருவு பதம்வாழி யெனது தமிழின்குமர
வுனதருட் கடல்வாழியே. (யக)

வேலுமயிலுந்துணை.

(ந-பு.)—

இது தணிகாசலத்திலமர்ந்திருக்கும் முருகக்கடவுள் விஷயமான துதி. "பரமசிவனிட மருவு தேவியருள் ஞானமணியே, சித்திரநடச் சிறைமயிற் பரிநடத்திய திருத்தணி மலைக்குமரனே" என்ற மகுடத்தை யுடைய 10 கழி நெடிலாசிரிய விருத்தப்பாவாலாயது. இந்தப் பிரதியில் இது முற்றுமுளது.

No. 1649. திருப்புகழ்.

TIRUPPUGAL.

Substance, palm-leaf. Size, 13½ × 1½ inches. Pages, 384. Lines, 8-9 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, new.

Contains only 400 stanzas.

A eulogy on God Murugakkaḍavuḷ as worshipped in the various holy shrines : by Aruṇagirinātar, who is said to have flourished more than 460 years ago. This well-known work consists on the whole of 16,000 stanzas, out of which 1,200 stanzas are printed as being extant.

Beginning :

எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

திருப்புகழ் படிப்பவர்கள் சிந்தை வலுவாலே
யொருத்தரை மதிப்பதிலை யுன்ற னருளாலே
பொறுப்புக மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்தரு டிருத்தணியினின்ற பெருமானே.

(* * * *)

முத்தைத்தரு பத்தித் திருநகை
யத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர—வெனவோதும்
முக்கட் பரமற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து முவர்க்கத் தமரு—மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
வொற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி—லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது—மொருநாளே,
இத்தித்திசை வொக்கப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொக்கந டிக்கக் கழுகொடு—கழுதாடத்
திக்குப்பரி வட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத்தொகு தொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக—வெனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக்குகு குகு
குத்திப்புதை புக்குப் பிடியென—முதுகூகை
கொட்புற்றெழ நட்புற்ற வுணரை
வெட்டிப் பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல—பெருமாளே. (க)

End :

மு[த](தி)ரவுழை[யும்](யை) வனத்தில் விரவியடியை யழுத்து
முதிய கயல்கள் கயத்தி—னிடையோடி
முரணவளரும் விழிக்கு(ள்) மத[னை](ன)விரது பயிற்றி
முறைமை கெடவு மயக்கி—வருமாதர்
மதுரவமுத மொழிக்கு மகுடகளப மு[ளை](லை)க்கு
வலிய அடிமை புகுத்தி—விடுமாய
மனதையுடைய வசட்டுமனிதன் முழுதுபுரட்டன்
மகிழ வுனது பதத்தை—யருள்வாயே
சதுரன்வரையை யெடுத்த நிருதனுடலைவதைத்துச்
சகட மருத முதைத்த—தகவோடே
தழை[யை](யு)மரமு நிலத்திலமடிய வமரைவிளைத்த
தனுவை யுடைய சமர்த்தன்—மருகோனே
அதிரமுடுகியெதிர்த்த வசுரருடலை வதைத்து
அமரர் சிறையை விடுத்து—வருவோனே
யரியபுகழை யமைத்த பெரியபழனிமலைக்கு
ளழகு மயிலை நடத்து—பெருமாளே. (கூ௱௬௰௬)

(அ)கல்வினையுட்சார்சட்சம
யிகளொடு வெட்காதட்[இ](ஒ)டு
மறிவிலி[த](வி)த்தாரத்தன மவிதார
அஙில்கமழ்கத்தூரித்தனி
யணைமிசை லகக்கா சுக்கள
வருள்பவர் நட்பே கொட்புறு - மொருபோதம்
பகலிரவிற் போதிற்பணி
பணியற மிட்டாவெட்டிய
பரமமயச்சோதிச்சிவ - மடைவானின்
பழனிதனிற் போயுற்பலம்
விளைவினைகட் சேர் வெட்சிகு
ரவுபயில் . . . .

(கு-பு.)—

இந்நூல் முருகக்கடவுளின் தோத்திரவிஷயமானது. முழுதும் சந்தவிருத்தங்களாலாயது. அருணகிரிநாதரென்னும் புலவர் பெருமானாற் செய்யப்பட்டது. இவர் முருகக்கடவுளின் அருள்பெற்றவர். அதனாலேயே பாடுந்திறமையும் பெற்றவர். பலதலங்களிலும் சென்று ஸ்ரீகுகப்பெருமான்மீது இவர்பாடியபாடல்கள் 16,000 என்ப. அவற்றுள் இப்போது அச்சில் வெளிவந்துள்ளவை 1,200 பாடல்களே. பாடல்கள் யாவும் சந்தச்சுவையும் பொருட்சுவையும் மிக்கவை. இவர் காலம் சுமார் 450 வருடங்கட்கு முந்தியதெனச் சொல்லப்படுகிறது.

இந்தப் பிரதியில் உள்ள பாடல்கள் 400.

No. 1650. திருப்புகழ்.
TIRUPPUGAḶ.

Substance, palm-leaf. Size, 14 × 1⅛ inches. Pages, 102. Lines, 5-6 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Incomplete.

Same work as the above. The eulogistic stanzas in this MS. have reference to God Subrahmaṇya worshipped in Śendil, Paḻani and Trichinopoly.

(கு-பு.)—

இது முன்பிரதிபோன்றது. ஆயினும் இதில், செந்தில், பழநி, திருச்சிராப்பள்ளி முதலிய சில தலங்களின் திருப்புகழே உள்ளன. முதலில் 6 ஏடுகள் இல்லை. இறுதியிற் பல ஏடுகள் இல்லை.

No. 1651. திருப்புகழ்.
TIRUPPUGAḶ.

Substance, palm-leaf. Size, 16⅝ × 1 inches. Pages, 62. Lines, 5 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains only 55 stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் சுமார் 55 திருப்புகழ்ச் செய்யுட்கள் உள்ளன. ஏடுகள் சிதைந்துள்ளன.

No. 1652. திருப்புகழ்.
TIRUPPUGAḶ.

Substance, palm-leaf. Size, 17½ × 1½ inches. Pages, 92. Lines, 4-7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Contains nearly 100 stanzas.

Same work as the above.

The scribe adds.

அப்பாசாமி கையெழுத்து.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றதே. இதில் நூறு செய்யுட்கள் உள்ளன. ஏடுகள் பல சிதைந்துள்ளன. 23-வது எண்ணமைந்த ஏடு இல்லை.

No. 1653. திருப்புகழ் (பஞ்சரத்தினம்).
TIRUPPUGAḶ (PAÑCARATTINAM).

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 66*a* of the MS described under No. 1315.

Contains only one to three stanzas.

Same work as the above. In the heading, the name Pañcarattinat-tiruppugaḻ is found.

Beginning:

மலடிவ[யத்தி](யிற்றி)ல் மகன்போலே யொரு
புதையிலெடுத்த தனம்போலே யொரு
வயிரமடித்த களம்போலே யிள முலைமாதர்
வலியவணைத்த சுகம்போலே கதி
ரொளிவிடு[ற](ர)த்தின வடம்போலே பரி
மள மெழுபுஷ்[ப்]ப வனம்போலே சுர—நதிபோல

*   *   *   *

யமரர் தமக்கு விருந்தே கான்மயில்
குதிரை நடத்துந் துரங்கா யோக—முருகோனே. (க)

End:

*   *   *   *

கற்பி[ற்று](த்து)ப் பாருலகேழையு மொக்கப்பொற்றுள்விளையாடிய
கச்சிக் கச்சாலையில் மேவிய பெருமாளே.

*   *   *   *

கள்ளார்ந்த செ(ம்)மைக் கமலம் புரைபாதா
வுள்ளாய்ந்த வன்' ர்க் கொளியானே—விள்ளாத
சோலை சூழ் கச்சிதனில் சூரியன்மால் பூசித்த
வாலையா[யெ](லென்)ன்னை யினியாள்.

(கு-பு.)—

இதில் பஞ்சரத்நத் திருப்புகழ் என்றுகூறப்படுகின்ற ஐந்து திருப்புகழ்ப் பாடல்களுள் மூன்று பாடல்கள் உள்ளன. இவையும் அருணகிரி நாதரா லே பாடப்பெற்றவை.

இதன் 69-வது ஏட்டில் 68-வது ஏட்டிலுள்ளதே திரும்ப எழுதப்பட்டுள்ளது.

No. 1654. திருப்போரூர்ச்சந்நிதிமுறை.
TIRUPPŌRŪRCCANNIDIMUṞAI.

Pages, 254. Lines, 8 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 312.

Complete.

Same work as that described under R. No. 78(*a*) of the Triennial Catalogue of MSS., Vol. I, but without the Pāyiram stanza.

At the end of the work there are two pages containing stanzas extolling the greatness of Tiruppōrūr in the Chingleput district

Beginning :-

ஈராறு வேணி யிறைவனார் புத்திரனை
யீராறுகையர்க் கிளையானை—யீராறு
கையானைப் போரூரிற் காங்கயனை யன்பர்க்குக்
கையானை நெஞ்சே கருது.

அண்டகோ டிகளுடன் றந்தவுட லியாவையு
மரியமறை முதல கலையு
மக்கரமு மெய்ப்பதமு மைங்கலையு மந்திரமு
மானபத கதியு மவருக்
(* * * *)
பண்டைமா மலதிமிரம் விண்டுபோர் தக்கிரண
பானுகோ டிகளென்னவே
பழுவடிய ரககமல மகலாது நின்றொளி
பரப்பியா னந்த முதவி
விண்டுவே முதலான வண்டர்மா முனிவர் நரர்
விக்கின மக[த்த](ற்றி)பாளும்
மேன்மைதரு போரூரி னிம்பநீ ழற்குலவு
வேழமுகனிரு சரணமே.

End;

நாவலர் நெஞ்சஞ் தாவுறு மின்பனலநீபர்
வோவற வென்று மோதுற வெண்ண முடையோர்கா
நீவையினங்கம் பாவையினங்கஞ் செயுநீத
னுவிறைமைந்தன் போரியை வந்திங்கடைவீரே. (ஸ)

ஆறுமுகந் துணை.

(த-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 78 (a) நம்பர் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது. அந்தப் பிரதியிலுள்ள பாயிர அகவல் இதிலில்லை. நூல் முடிந்தவுடன் போரூரின் பெருமையைக்குறித்த சில பாடல்கள் இரண்டு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன.

No. 1655. திருப்போரூர்ச்சந்நிதிமுறை.

TIRUPPŌRŪRCCANNIDIMURAI.

Pages, 410. Lines, 5 on a page.

Begins on fol. 19*a* of the MS. described under No. 1648.

Complete.

Same work as that described above.

Foll. 124 to 133 and 152 are wanting.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் நூல் முற்றுமிருக்கிறது. 124–133, 152ஆகிய எண்களமைந்த ஏடுகள் இல்லை.

No. 1656. திருவகுப்பு.
TIRUVAGUPPU.

Pages, 110. Lines, 7-9 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 127.

Incomplete in 25 stanzas.

A work eulogising the feet, arms, lancet, peacock vehicle, etc., of God Subrahmaṇya; by Aruṇagirinātha. In the first leaf of this MS. a note is made to the effect that one to eighteen stanzas alone are the production of Aruṇagirinātha and that the remaining stanzas are not his.

Beginning:

கணபதிதுணை.

முதலாவது - சீ[ர்]பாத வகுப்பு.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனன தன தனன தன தனதான தானதன
உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்

* * *

மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
வசனிபயி ரவிகவுரி யுமையாள்த்ரி சூலதரி
வனசைமது பதியமலை விசையைதிரி புரைபுனிதை
வனிதையபினவை யனகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனறு பவனபயனு பயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மணநாறு சீறடியே. (க)

சீர்பாதவகுப்பு முற்றிற்று.

இரண்டாவது தேவேந்திர சங்கவகுப்புச் சொல்வோம்.

End:

இனி இருபத்தைந்தாவது திருப்பரங்கிரி வகுப்பு.

தானதந்தன தானதந்தன தானதந்தன தானதந்தன
தானதந்தன தானதந்தன தனதானன,

சாதியுங்குல மாவதுங்குடி யாவதுஞ்சன மாவதுங்கிளை
தாரமுந்திர பாலரும்பிர தானமும்பெரு காண்மையும்பெறு
தானமும்பகு மானமுஞ்சிவ ஞானமும்பல கோலமும்புரி தொழிலோடுமே
* * * *
வானரங்கதிர் தாவுதண்டலை மேவுகொண்டலை யூடுநின்றலை
மாவினங்களி கூருநண்பொடு கோகனஞ்செறி பாலவந்திகழ்
பேர்சிறந்திரு மூவர்விஞ்சையர் சூழ்பரங்கிரி முருகேசனே. (க)
(உயடு)

திருப்பரங்கிரிவகுப்பு முற்றிற்று.
திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது முருகக்கடவுளின் பாதம், புயம், வேல், மயில், வீரம் முதலியவற்றைத் தனித்தனி சிறப்பித்துக் கூறுவது. சந்தக்கவி பாடுவதில் வல்லவரான அருணகிரி நாதராற் செய்யப்பட்டது. இதில் 25 வண்ண விருத்தங்களாலாகிய 25 வகுப்புக்கள் உள. அவையாவன :—

(1) சீர்பாத வகுப்பு.
(2) தேவேந்திரசங்க வகுப்பு.
(3) வேல் வகுப்பு.
(4) திருவேளைக்காரன் வகுப்பு.
(5) பெருத்தவசன வகுப்பு.
(6) பூதவேதாள வகுப்பு.
(7) பொருகளத்தலகை வகுப்பு.
(8) செருக்களத்தலகை வகுப்பு.
(9) போர்க்களத்தலகை வகுப்பு.
(10) திருஞானவேழ வகுப்பு.
(11) திருக்கையில்வழக்க வகுப்பு.
(12) வேடிச்சி காவலன் வகுப்பு.
(13) சேவகன் வகுப்பு.
(14) வேல்வாங்கு வகுப்பு.
(15) புய வகுப்பு.
(16) சித்து வகுப்பு.
(17) கடைக்கணியல் வகுப்பு.
(18) சிவலோக வகுப்பு.
(19) மயில் வகுப்பு.
(20) கொலு வகுப்பு.
(21) வீரவாள் வகுப்பு.
(2) சிவகிரி வகுப்பு.
(23) திருந்செந்தில் வகுப்பு.
(24) திருப்பழனி வகுப்பு.
(25) திருப்பரங்கிரி வகுப்பு.

என்பன.

இந்தப் பிரதியின் முதலேட்டில்,

"சீர்பாத வகுப்பு முதல் பதினெட்டே அருணகிரிநாதரால் பாடப்பட்டவையென்று பலருஞ் சொல்லு[கு](கி)ரார்கள். அப்படியே பழமையான பல பிரதிகளிலிருக்கின்றன. சில பிரதிகளிலே இருபத்தொன்று முப்பத்திரண்டு வரைக்கும் அதிகப்பட்டு இருக்கின்றன. அவைகளைக் குறித்து ஆலோசிக்கும்போது பதினெட்டுக்கு மேற்பட்டவை அவர் வாக்குக்களாகத் தோன்றவில்லை. அவ்வாமலும், அவைகளிலே சில சந்தச் சிதைவுகளாயும் அகவல்களாயும் இருக்கின்றன. இப்படியிருக்கையால் அந்தப் பதினெட்டையும் முன்வைத்து மற்றவைகளிலே சந்தமுடைய ஏழு வகுப்புக்களை அவற்றின் பின் வைத்துப் பதிக்கப்பட்டன. திருத்தணிகை சரவணப்பெருமாளையரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டன. அதைப்பார்த்து விளம்பி௵ பங்குனி௴ முதல் தேதி திருக்காஞ்சிபுரம் பிள்ளைபாளையத்தைச் சேர்ந்த அக்கணம் பாளையத்தெருவிலிருக்கும் செங்குந்தமரபில்[த்]தோன்றிய மத்தூர் மணியப்ப முதலி எழுதிக்கொண்ட வகுப்பு (உயடு)" —என்று எழுதப்பட்டுள்ளது. ஆதலால் இவற்றிற் பின்னுள்ள ஏழுவகுப்புக்கள் அருணகிரி நாதராற் செய்யப்பட்டனவல்ல எனக்கருதற் கிடமுண்டு,

No. 1657. திருவகுப்பு.
TIRUVAGUPPU.

Pages, 85. Lines, 9–10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1196.

Contains 25 Vaguppus.

Slightly different from the work described above. Five Vaguppu contained herein are not found in that MS.

End:

ஓதி.

அரிதிரு மருகா முக்கணன் மகனே
ஆனைக்கிளைய வயில்வேல் முருகா
அடியேன் வல்வினையகற்றிடு மொருகை
திரிபுரமெரி செய நகைப்பவன் மகனே
முகனே முனிவர்கள்வந்து வணங்கிட
அந்திர மந்திரமகண்ட முதிர்ந்திட(ப்)
பரிவேல் மிகவொடு பாதாளலோகமும்
புகுந்தாராய்ந்து விடுமொருகை.

(* * *

சிவசுப்பிரமணியன் திருப்பழனி வருகுமரன்
சரவணேற்பவன் வெண்ணீறுதானே.

கரவகுப்பு முற்றும்.

பிரம்ம விலாசமே நித்தியபரிபூரணம். சச்சிதாநந்தமே நித்தியபரிபூரணம். வேலு மயிலுந்துணை. குமரனே தெய்வம். ஆறுமுகங் குருவே துணை.

(கு-பு.)—

இது முன்பிரதியினும் சிறிது வேறுபட்டது. இதிலும் 25 வகுப்புக்களிருக்கின்றன. அவற்றிற் சில முன் பிரதியில்லாதன. அவை வருமாறு :—

உபதேச வகுப்பு.
சொரூப வகுப்பு.
மணவாளன் வகுப்பு.
பூதசங்கார வகுப்பு.
கர வகுப்பு.

No. 1658. திருவகுப்பு.
TIRUVAGUPPU.

Substance, palm-leaf. Size, 13 × 1½ inches. Pages, 91. Lines, 7 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Wants three leaves in the beginning.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதியைப் போன்றதே. இந்தப் பிரதியின் முதலில் மூன்று ஏடுகள் இல்லை. ஓரேடு முறிந்திருக்கிறது. இது மிகப்பழைய பிரதி.

No. 1659. பழனிப்பத்து.

PAḺANIPPATTU.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 6*a* of the MS. described under No. 1648.

Complete in 12 stanzas.

A eulogy on God Subrahmaṇya as worshipped in the sacred shrine at Paḻani. The work has not been printed. It may be noted that the last stanza of this work agrees in meaning with the eleventh stanza of the Tanikaippattu. This raises a presumption for the inference as to the identity of the authorship of these two works.

Beginning :

பூமருவு வேதனுந் திருமருவு மாலும்
　　புரந்தரனு மிமையோர்களும்
புடைமருவ மகிழ்வள்ளி தெய்வானை யென்னுமிரு
　　பூவையிரு பாலுமருவத்
தேமேவு நீபமா லிகைமருவு தோள்களுஞ்
　　செய்யமணி மவுலியாறு(ந்)
திருமுகக் கருணையும் பரிபுரச் சரணமுஞ்
　　செங்கையணி வடிவேலுமாய்
மீமருவு சேவலங் கொடியாட
　　மென்சிறை விரித்தாடு மயிலேறியே
விளையாடி வருபவனி தெரிசனந்தந்தெனது
　　வினைதீர வருள்புரிகுவாய்
தூமருவு பூதியணி வேதியர் தபோதனர்கள்
　　சூழ்பழனி மாநகரில் வாழ்
சொற்சுருதி நாடரிய சிற்சுகசொரூபசிவ
　　சுப்பிரமண் யக்கடவுளே. (க)

End :

ஓதும்வே தாகம புராண(ம்)பல கலைவாழி
　　யுலகமீரேழும் வாழி
யுமைவாழி யரன்வாழி மாலயன் குலிசனிமை
　　யோர்கண்முனிவோர்கள் வாழி
பூதிசா தனம்வாழி வேள்வியந் தணர்வாழி
　　புரவலர்க ணீதிவாழி
புகழ்பெறும் பழனியங் கிரியு நதி களுமேவு
　　புனிதர்களு மிகவும் வாழி
யாதிகண பதிவாழி சேவலங் கொடிவாழி
　　யணிநீப மாலைவாழி
மயிலைவகுற வள்ளிதெய் வானைதிரு மங்கலிய
　　மருளொளி சிறந்து வாழி

சோதிவடி வேல்வாழி மயில்வாழி திருவருட்
　　யேதிரு மேனிவாழி
சுப்ரமண் யக்கடவு ளௌனது தமிழ்மாலையணி
　　துணைமலர்ப் பதம்வாழியே. (கஉ)

(கு-பு.)—

இது, பழனியில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுளின் துதி ; பன்னிரண்டு ஆசிரிய விருத்தங்களாலாகியது. இந்நூல் அச்சிடப் பெறவில்லை. இதன் இறுதிச் செய்யுளும் தனிகைப்பத்தின் 11-ஆம் பாடலும் சொல்லாலன்றிப் பொருளால் சிறிதும் வேறுபாடுடையனவல்ல. இதனால் இவ்விரு நூலும் செய்தவர் ஒருவராயிருக்கலாமென்று கருதுதற்கும் இடமுண்டு.

No. 1660. பழனிமலைக்குமரன் துதி.
PALANIMALAIKKUMARANTUDI.

Pages, 20. Lines, 5 on a page.

Begins on fol. 19*a* of the MS. described under No. 1074.

Complete.

Similar to the work described above. The name of the author is not given. The work has not been printed.

Beginning :

அன்னையும் பிதாகுரு தெய்வமென் றன்னையே
　　யனுதினமுந் துதிகள்புரியும்
அன்பருடையுடல மதிற்றுன் பவினைவருவதே
　　னந்தவினை வந்தபிணியும்
சின்னபின் னமுமாகச் சிதறவே யடித்திடுஞ்
　　சிங்காரமான வேலா
தேவர்துயர்தீரவே யசுரரைவதைத்திடும்
　　சென்னிமலை யதிகாரனே
வன்னமயில் மீதிலே வள்ளிதெய்வானையுடன்
　　மணக்கோல மாகவேதான்
வந்துகா[ஷி](ட்)சிகள் முத்திதந்திடவிது வேளை
　　வரமுதவிக்காய குருவே
பன்னகக்கண்[ணிட](ண னுடை)ம[று](ரு)கனே யுமைபெ[த்ச](ற்ற)
　　பரமரகசிய முதல்வனே
பழமையாகிய வேதமுனிவரண்டர்கள் சூழும்
　　பழனிமாமலைக்குமரனே. (க)

End :

ஔவனு[த்தரி](ற்றறி)ந்தோது மடியார்கள் வணிகரில்
　　அழகானபைபயி அந்தை(?)யான்
அநுதினமு மறவாமல் பூசைபுரியும் நல்ல
　　வன்பனுன் சிதம்பரபூபன்

மௌவாக வந்ததொரு வருணகிரி முத்தய்யன்
மகிபனண்ணுமலைக்கு
வருந்துணைவன்சாமி யிடமனதுயர்பிணி யகல
வரமு[த்]தவ[மறுள]வேணுமை[ய்]யா
எவ்வுயிருநீயன்று எள்ளுக்குளெண்ணெ[ப்]போல்
[யி] இருக்கின்ற ஞானகுருவே
யீராறு காமுள்ள வேலனே கோலகலகவியின் ?
எழுதின செந்தமிழ்(ப்)பாடலைப்
[ை](ெ)ப(ர)வமாகவே நீ[று](ரு)முட்கொண்டு ரட்சியும்
பரமரகசிய முதல்வனே
பழமையாகியவேத முனிவரண்டர்கள் சூழும்
பழனிமாமலைக்குமரனே. (யஉ)

(கு-பு).—

இதுவும் பழனியிலுள்ள சுப்பிரமணியக் கடவுள் விஷயமானது. "பழமையாகிய வேத முனிவரண்டர்கள் சூழும், பழனிமாமலைக் குமரனே" என்னும் மகுடத்தையுடைய 12 கழிநெடிலாசிரிய விருத்தங்களாலாயது. செய்யுள் நடை தாழ்ந்தது. பிழைகள் மிகுதியாகவுள. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை. இந்தப் பிரதியிற் பூர்ணமாக இருக்கிறது.

No. 1661. பழனிமலைவடிவேலர்பதிகம்.

PAḺANIMALAIVAḌIVĒLARPADIKAM.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 15*a* of the MS. described under No. 1648.

Complete in eleven stanzas.

Similar to the work described above. The name of the author not given.

Beginning :

மலர்மகுட மோரார்று மலர்வதன மோராறு
மலர்சுடிகை யோராறுமே
மலர்மதிக மோராறு மலருமுடி யோராறு
மலர்பவள வாய்களாறு
மிலகுசெவி யீராறு மிலகுகுழை யீராறு
மிலகுவிழி யீராறுநீ
ளிலகுகரமீராறு மிலகுபடையீராறு
மிலகுபுய மீராறுமே
வனமருவுபுரிநூலு மரைநூலு மயின்மேலு
மன்னையரிரண்டுபாலு
மணிநூபுரக்காலும் வடிவேலுமாகவந்
தடியேனையஞ்சலென்பாய்

பலவமரர் பலமுனிவர் பலசுருதி பலமிருதி
பலகலைகள் புகழ் முதல்வனே
பழமறை சொல்லிய சீல[ர்]தொழுமவர்களனுகூல
பழனிமலை வடிவேலனே. (க)

End :

தரியிரவியுதையமதுகண்டு வை[க](ய)ாபுரி
தனி(ற்)கண்டு சத்திகண்டு
சண்முகப்புனல்கண்டு நியமாதிகண்டுபின்
சரவணப்பொய்கையாடி

யருள்பெருகு மாவின(ந)[ன்]குடிகண்டு கயிலாய
ரம்மை பெரியம்மையைக்கண்
டம்பமலை கண்டடிவிடும்பன்சன்னிதிகண்
டனேககண்கா[ஷஷி](ட்சி)கண்
கருணைகண்டருள்வள்ளி தெய்வானையைக்கண்டு
களிகண்டிருக்கு முன்றன்
கமலபாதங்கண்ட பேறொருக்காலுமக்
காலனைக்கண்டிடுவரோ

ப[ரு](ரி)திவலி கண்டவன் வலிகண்ட தம்பிதன்
ப[ல](ர)ாக்கிரமங்கண்டதுரையே
பழமறை சொல்லிய சீல தொழுமவர்க[லனு]'ளனு)கூல
பழனிமலை வடிவேலனே. (மிக)

சுப்பிரமணிய சுவாமியார் துணை.

(கு-பு.)—

இதுவும் பழனித்தலத்திலுள்ள குமரக்கடவுள் விஷயமான துதி. "பழமறைசொல்லிய சீல தொழுமவர்களனுகூல பழனிமலை வடிவேலனே" என்னும் மகுடத்தையுடைய 11 கழிநெடிலாசிரிய விருத்தங்களாலாயது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. இந்தப் பிரதி பூர்த்தியுடையது. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை. அச்சிடப்படவில்லை.

No. 1662. பழனிவேலர்துதி.

PALANIVĒLARTUDI.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{8}$ × $1\frac{5}{8}$ inches. Pages, 9. Lines, 7 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Complete.

Similar to the above. The name of the author is not given.

Beginning :

அறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலு
மலங்கார வாபரண மணிந்த மார்புந்
திருமுகமும் வெண்ணீறு புனைந்த மெய்யுஞ்
செகமெலாம் புகழ்படைத்த சுப்பிர மண்யா

முருகசர வணபவனே கார்த்தி கேயா
முக்கண்ணர் புத்திரனே யுக்ர வேலா
விருவருமேயு னைப்பணிந் தோம் பழனி வேலா
விதுசமய மடியாரை ரட்சிப் பாயே. (க)

End:

அத்திமுகக் கணபதிக் கிளைய வேலா
வறுமுகனே தணிகையிலே யமர்ந்த வாசா
வித்தைபுத்தி போதாத மூட னானும்
வேலவனே யுன்னருளாற் கவிகூயப் போலே
பத்துமே பதிவாகப் பாடிச் சொன்னேன்
பைந்தமிழாற் பிழைகண்மனம் பொறுத்தே யாள்வாய்
சத்தியமா வுனைப்பணிந்தோ நாங்க ளையா
சண்முகமே யிதுசமயம் ரட்சிப் பாயே. (கக)

சுபமஸ்து.

(கு-பு.)—

இதுவும் பழனியில் எழுந்தருளிய முருகக்கடவுள் விஷயமான துதி. செய்யுள் நடை நன்றாக இல்லை. இதில் இது பூர்த்தியாக இருக்கிறது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

No. 1663. பழனிவேலர்துதி.

PAḶANIVĒLARTUDI.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{8} \times 1\frac{1}{4}$ inches. Pages, 7. Lines, 8 on a page. Character, Tamil. Condition, good. Appearance, old.

Begins on fol. 46*a*. The other works herein are Dakṣiṇāmūrtivākyam 1*a*, Dakṣiṇāmūrtiñānaaḍukkunilai. 10*a*, Bōgarpūjāvidiparipūraṇam 19*c*, Ānandakkaḷippu 37*a*, Aruṇācalēśartudi 43*a*, Meyñanakkuravañji 50*a*, Ahattiyar Rattinaccurukkam 58*a*.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இது முற்றும் உள்ளது.

No. 1664. போரூர் ஆறுமுகன்குறுங்கழிநெடில் விருத்தம்.

PŌRŪR ĀṞUMUHAN KUṞUṄGAḺINEḌILVIRUTTAM.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on fol. 25*a* of the MS. described under No. 1185.

Complete.

. Same work as that described under R. No. 293(n) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2, Tamil. After the end of this work there is a stanza in praise of God Murugakkaḍavuḷ and another stanza in praise of Mayilai Saṛguruvānandar.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 293 (n) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றும் உளது. இது முடிந்த பின்னர் முருகக்கடவுள்விஷயமான வேறொரு பாடலும், மயிலைச் சற்குருவானந்தர் விஷயமான அம்மானைப் பாடலொன்றும் எழுதப்பட்டுள்ளன.

No. 1665. போரூர் ஆறுமுகன்குறுங்கழிநெடில் விருத்தம்.

PŌRŪR ĀṞUMUHANKUṞUṄGAḺINEḌILVIRUTTAM.

Pages, 5. Lines, 8 on a page.

Begins on fol. 124*a* of the MS. described under No. 271.

Complete.

Same work as the above and this is the original of the work described under R. No. 293 (n) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. மூவருடத்திய காட்லாக் 293 (n) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. அதிலுள்ள அளவே இதிலும் இருக்கிறது.

No. 1666. மயில்விருத்தம்.

MAYILVIRUTTAM.

Substance, palm-leaf. Size, 13¼ × 1¼ inches. Pages, 10. Lines, 5 on a page. Character, Telugu. Condition, slightly injured. Appearance, old.

Complete in 13 stanzas.

A eulogy on the peacock vehicle of God Subrahmanya: by Aruṇagirinātar. The language of the work contains a large admixture of sanskrit words.

Beginning:

நடக்கின் நிலமதிரும் நற்சிறகால் வீசி
யடக்கி[ய]னருவரைகள் நீரும்—விடக்கழியில்

கந்தண்ண ரெங்கள் கயிலாய வாழுமையாள்
மைந்தனு ரேறு மயில்.

* * * *

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமரச சிகாவல குமரசடானன சரவண குரவணியுங்
கொந்தள பாரகிராத புராதனிகொங்க வெனப்பரவும்
கூதள சீதள பாதள மௌக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ருபாகர கோமளகும்பகராதிபமோகரத
கரமுகசாமர கர்ணவிலாச கபோலவிதானமதத்
தெந்தமகோதர மூஷிகவாகன சிந்துரபத்மமுகச்
சிவசுத கணபதி யிக்னவிநாயக தெய்வசகோதரனே. (க)

End:

சோதியிமவேதண்ட கன்னிகையர் தந்தவபி
நயதுல்ய சோமவதன
துங்கத்ரிசூலதரி கங்காளி சிவகாமசுந்தரி
பயந்ததிரைசே
ராதிமுதல்மூதண்ட வண்டபகிரண்டங்கள்
யாவுங்கொடுஞ் சிறகினு
னணையுந்த னது பேடை யண்டங்களென்ன வே
யணை க்குங் கலாபமயிலாம்
நீதிமறை யோதண்ட முப்பது முக்கோடி
நீத்தரும் பரவு கிரியாம்
நீலகிரி யேலவ நிராலம்ப நிர்ப்பய
நிர்வ்யாகுலன் சங்குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந்தரித்தபுயல்
மாதவன் முராரி திருமால்
மதுகனிடதாரி திருமருகன் முருகன் குமரன்
வரமுதவுவாகை மயிலே. (மக)

எந்நாளுமொருசுனையி லிந்த்ர நீலப்போ திலங்கிய
திருத்தணியில்வாழ்
எம்பிரா னிமையவர்கள் தம்பிரானே[ரு](று)மொரு
நம்பிராணுளமயிலைப்
பன்னு மடிபரவு மருணகிரிநாதன்
பகர்ந்தவதிமதுரசித்ரப்
பாடல்தரு மாசறு விருத்த மொரு பத்தும்
படிப்பவர்களாதி மறைநூல்
மன்னுன்முகம் பெறுவரன்னமே றப்பெறுவர்
வாணி[ு]தழுவப்பெறுவரால்
மகராலயம் பொருதவு வண்மேறப்பெறுவர்
வாரி[ஸ]ச மங்கையுடன்வா
ழுந்நாயகம் பெறுவரயிராவதம் பெறுவ
ரமுதாசனம் பெறுவர்மே
லாயிரம்மிறை தொழுவர் சீர்பெறுவர் பேர் பெறுவ
ரழியாவரம் பெறுவரே. (கட)

Colophon:

ஸ்ரீசிவாய குரவேநம சிவாய குரவேநம
சர்வதாரி ஸம்வத்சரம் சோமவாரம் புதச்
சேரிவோ(வ்) ராசின மயிலு விருத்தம் ஸம்பூர்ணம்
குமாரசுவாமினி யொக்க வாகன அயின நெமிஷி ஸ்தோத்திரம்.

(கு-பு.)—

இந்நூல் முருகக்கடவுளின் வாகனமாகிய மயிலின் தோத்திர ரூபமானது. காப்புச் செய்யுளிரண்டும் நூற்பயன் கூறும் இறுதிச் செய்யுளொன்றும் நீங்கலாக, பத்து விருத்தங்களையுடையது. நூலாசிரியர் அருணகிரிநாதர். செய்யுள் நடை சிறந்தது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது. இதில் வடமொழிப் பதங்கள் மிகுதியாக விரவியுள்ளன.

No. 1667. மயிலாசலத்தந்தாதி.

MAYILĀŚALATTANDĀDI.

Substance, palm-leaf. Size, 12 × 1 inches. Pages, 108. Lines, 4 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old.

Complete.

A eulogy on God Subrahmaṇya, as worshipped in Mayilācalam or Mayilam (in the South Arcot district). From the last stanza of the work, its author is made out as Cinnayadēśikar of Pōykaippākkam. Two stanzas are added at the end in praise of the author and his work, by his son and grandson whose names are given as Paccayappa and Sabhāpati. After the end of the work, there are three leaves containing some stray stanzas.

Beginning:

இந்தா ரிதழியணிந்தா ருயர்ந்த விமையவர்கள்
சிந்தா குலங்கெடத் தந்தாய் மயிலைச்சிகரிவந்த
நந்தா விளக்கன்ன கந்தாவுன் மீதினிலுயடியே
னந்தாதி கூறவுன் செந்தாளென் சிந்தையமைத்தருளே.
வெயிலவரைக் கந்தப்பூங் காத்தாற்பற்றி வெம்பணி(யிற்)
பயிலவரைக் கந்தமாகப் புனையும் பகட்டிபசே[வம்](ம)
யயில்வரைக் கந்தரனேர் குரல்வள்ளி யின[ரவை](ன்பரி)ன்பார்
மயிலவரைக் கந்த(ரந்தா)தி யான்சொல்ல வந்தருளே.

* * * *

சீர்தந்த வாரிசப் பொன்னுந் தனவுந் திகழு முத்து
நேர்தந்த வாணியும் வாழ்மயி லாசல நேயக் கந்த
ஞர்தந்த வாதி சயம்பெறு[ெ]வள்ளிதெய் வானைபதி
யோர்தந்த வானைக் கிளையோரென் பு(ந்தி)யி (லுள்)ளவரே. (க)

End:

வரும்பத்தரை யங்கைமாவுக் கிளவல் மயில வெற்பன்
விரும்பத்தரை யும்வணங்கச்செய் தேசிகன்மெய் யன்புள்ள
பெரும்பத்தரைத் தன்றிரு வடியைப் பிரியாம னரைத்
திரும்பத்தரை யிற்பிறவா தளிப்ப னற்சீருளே. (கoக)

Colophon:

நாகம் புகழ் மயிலாசலக் கந்தனற் புலவன்
ராகம் பெறுமுத்தமிழ் தேர்ந்த நீரும் பண்பார் புலவ
ராக மிகவும் பெரியோர் சிறியன் சொற்கன்பு செய்வீர்
தேகங் கருத்துத் திடங்கவி யென்பெயர் சின்னையனே.

(இச்)செ(ய்)யுள் இந்நூல் செய்தவருடைய புத்திரராகிய பச்சையப்ப வுபாத்தியாயரால் சொல்லப்பட்டது.

" தெய்வப் புலமைத் திருவள்ளுவர் மறைதேர்ந் துரைத்த
மெய்ம்மைப் பொருளுணர் மேதாவியன் வியன்மாமயில
சையத்தினன் குகன்மீதி லந்தாதித் தமிழுரைத்தான்
செய்முத்தமார் பொய்கைப் பாகையன் சின்னைய தேசிகனே."

இச்செய்யுள் இந்நூல் செய்தவருடைய பேரராகிய சபாபதி வுபாத்தியாய ராற் சொல்லப்பட்டது.

" இன்பம் பொருந்தி யிருவினைக் கட்டறுத் திம்மையுற்ற
சன்ம முடிவிற் சமனனு காவணஞ் சார்வுர்முத்தி
சின்மய போதச்சிவ குருநாதற்குச் சின்னையன் சொன்
மன்மயிலாசலத் தந்தாதியி னென்றை வாழ்த்தினரே."

(கு-பு.)—

இது மயிலம் என்னுந் தலத்தில் எழுந்தருளிய முருகக்கடவுள் விஷய மானது. பொய்கைப்பாக்கம் சின்னைய தேசிகரால் இயற்றப்பட்டதென்று இறுதிச் செய்யுட்களால் விளங்குகின்றது. இந்தப்பிரதியில் இந்நூல் முற் றும் இருக்கிறது. இதன் பின்னர், இரண்டேடுகளில் தனிப்பாடல் நான்கு எழுதப்பட்டுள்ளன.

No. 1668. மயிலாசலத்தந்தாதி.
MAYILÂSALATTANDÂDI.

Substance, palm-leaf. Size, $11\frac{5}{8} \times 1$ inches. Page, 104. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது, முன்பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றும் உள் ளது. இறுதியில் உள்ள சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இதில் இல்லை.

No. 1669. முருகன் துதி.
MURUGANTUDI.

Pages, 6. Lines, 7 on a page.

Begins on fol. 19*a* of the MS. described under No. 1197.

Complete.

A eulogy on God Subrahmaṇya also called Murugakkaḍavuḷ.

Beginning :

சுப்பிரமணியர் பேரில் வ[ரு](ர)முருகாற்றுப்படை.

ஹரிஓம் ஆம் அய்யும்
ஓம்க்ராங் கிரீயும் குரோம்
அய்யுங் கிலியுஞ் சதாசிவ சண்முக
சர வணபவ சண்முகபவ சயலொளிபவ
திரிபுரபவ திகழொளிபவ
பரிபுரபவ பவமொழிபவ
கயலொளிபவ சரவணபவ வசீகரபவ
ஆயகாய நமசிவாய ஓம் கார்த்திகை ஆய
மயூரவாகனுய தெய்வானை நாயக
வள்ளிமணவாளா ஆறுமுகவா
பன்னிருகரவா ஆடையாபரணு

End :

பலதுஷ்ட தேவதைகள் சங்கரித்துவிடு
சங்கரித்துவிடு சகல தோஷங்களையும்
சகல பாவங்களையும் சகல வியாதிகளையும்
சகல விஷங்களையும் நிர்த்தூளியாக்கிவிடு
வாவா சரவண மயில்வீரா தண்டைக்
காலா த[ர்ப்](ற்)பராதீதா சரணம் சரணம்
சுப்பிரமணிய சுவாமி சரணம்.
ஓம் சிவசரணம்.

Colophon :

வ[ரு](ர)முருகாற்றுப்படை முற்றும்.

(த-பு.)—

இது முருகக் கடவுள் விஷயமான துதி; பாட்டு மிகப்பிழையுள்ளதாகக் காணப்படுகிறது. இந்தப் பிரதியில் இது முற்றும் உள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1670. முருகன் துதி.
MURUGANTUDI.

Pages, 3. Lines, 9 on a page.

Begins on fol. 111*a* of the MS. described under No. 1214.

Contains eight stanzas.

Similar to the above.

Beginning :

செப்புவது முன்னைச் சினமிறக்கப் போகாது
அப்புமுத லுப்பெனமெய் யானதே—தப்புமது
காட்டி லருவுருவாய்க் ? கருணைவடி வேல்முருகன்
நாட்டிலக லாதுருவே நா[டில்](டு). (க)

End:

[யெ](எ)ன்றே யென்னுமெண்ணுமெண் தான்
உன்றே வுன்னு முள்ளுமுள் ளான்
பின்றே பின்னும் பிறவாணிற வான்
முன்றே முன்னு முருகன்முனி வேல். (௯)

* * * *

ஆமென்று மோமென்று மஞ்செழுத்தென்று மகண்டமென்று
மோமென்ற பீடத்தொதுக்கினையே யும்பர் தேடரிய
மாவென்றும் வாவென்றும் நாவென்று நீயெண்ணி வைத்ததெல்லாம்
(நீ)யென் றிருத்தினையே யெனையாளுஞ் செயசிங்கமே. (அ)

(கு-பு.)—

இந்நூல் முருகக் கடவுள் விஷயமானது. இந்தப் பிரதியில் எட்டுப்பாடல்களேயுள்ளன. பெயரின்னதென்றும் இயற்றியவ ரின்னாரென்றுந் தெரியவில்லை.

No. 1671. முருகன்துதி.
MURUGANTUDI.

Pages, 52. Lines, 4 on a page.

Begins on fol. 40*a* of the MS. described under No. 1074.

Similar to the above.

Beginning:

முருகா வென்றுன்னை யிருகரங்கூப்பி முடியில் வைத்தா
லிருகாலம் பொய்த்த வினைவருமோ வெளியேன் பிழையே
தருகாமற் காப்பதுன் கடன்காண் மயிலமே கவர்ணன்
மருகாகுறப்பெண் மணாளா திருத்தணிமலைக் கந்தனே. சரவணபவன். (௧)

End:

ஓராறு சென்னி யொருமுருகா வென்பவர்க்குத்
தீராத வல்வினைகள் தீருமே—கூருக(க்)
கொக்கரை(ப்) பிடித்திழுத்துக் கொக்கர்கொட்ட மிட்டடக்கி
விக்கிரமத் திருக்கரத்தில் வேல்.

(கு-பு.)—

இதில், பலதலங்களிலுமுள்ள சுப்பிரமணியக் கடவுளைப் பொதுவாகத் துதிக்கும் பலபாடல்கள் உள. இவற்றுட்பெரும்பாலன கட்டளைக் கலித்துறைகளே. இரண்டொரு வெண்பாக்களேயுள. செய்யுள் நடை சாதாரணமானது.

No. 1672. வேல்விருத்தம்.
VĒLVIRUTTAM.

Pages, 9. Lines, 9 on a page.

Begins on fol. 83*a* of the MS. described under No. 127.

Complete in ten stanzas.

A eulogy on the chief weapon called Vēlāyudam of God Murugakkaḍavuḷ. by Aruṇagirinātar. The work has been printed.

Beginning :

வேல்விருத்தம்.

மகரமள றிடைபுரள வுரககண பணம்வலி
　　மதியுமிர வியுமலையவே
வளரெழிலி குடரழல [யி](வி)மையவர்க ளுகல
　　மகிழ்வுபெற விருசிறையவாம்
சிகரவரை மனமறுக மறுகுதொறு நுளைமகளிர்
　　செழுநெலொடு தரளமிடவே
சிகரபகி ரதிமுதல நதிகள்கதி பெறவுததி
　　திடரடைய நுகரும்வடிவேல்
தகரம்ருக மதமிதென மணமருவு கடகலுழி
　　தறுகவுளு மொருவனெயிறுந்
தழல்செவியு நுதல்விழியு முடையதொரு கடவுண்மகிழ்
　　தருதுணைவ னமரர்குயிலுங்
குமரமலை யெயினர்குல மடமயிலும் மெனுமிருவர்
　　குயமொடமர் புரியுமுருகன்
குமரனறு முகவனிகல் நிருதர்நிசி சரரணிகள்
　　குலையவிடு கொடியவேலே. (௧)

End :

வலாரிய லவாகுல [ணி](நி)லாதக லவேகவியன்
　　மலாரிய நாலுணிலை [ணு](நூ)ல்(?)
வலானலை கிலாணலை விலான்மலை
　　விலாநிலை மனோ[லை](ல)ய முலாசமுறவே
[வு](யு)லாவரு கலோவம காரா[லை](ல)ய கிலாகர
　　மிலோமிரலை நீர்நிலைவுலா
வுலோகவலி சாலசுரர் லோகமன லேறிடவி
　　லோதலவி நிலாவுகுலைவேல்
சிலாவட நலோதல தலோதல சிலீமுக
　　ணிலாசனி விலார்
சிலாமல ரெலாமல ரெலாமதி யலோதிம
　　திசேயொழி கலாப முகில்தன்
விலாசகவி யாணகலை மேருமுலை சோபமிடு
　　மேவியவி லாசவகலன்
விலாழியி ணிலாளியகல் வாணிலன லாறவிடு
　　வேளிளை ஞனார்கைவேலே. (௰)

Colophon :

வேல்விருத்தம் முற்றும்.

(கு-பு.)—

இந்நூல் முருகக்கடவுளின் ஆயுதமாகிய வேலின் சிறப்பைக்கூறுவது. பந்துச்சந்த விருத்தங்களாலாயது. இதனை யியற்றியவர் அருணகிரி நாதர். இந்தப்பிரதியில் இதுமுற்று மிருக்கிறது. இறுதிச் செய்யுள் மிகப் பிழை படவெழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் அச்சிடப்பெற்றிருக்கிறது.

No. 1673. மண்ணிப்பாகைநகர்ச்சுப்பிரமணியன்பதிகம்.

MAṆṆIPPĀKAINAGARCCUPPIRAMAṆIYANPADIKAM.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 10*b* of the MS. described under No. 1648.

Complete in ten stanzas.

A eulogy on God Subrahmaṇya as worshipped in a place called Maṇṇippākai.

Beginning:

பூமேவு கற்பக(ப்) பதிமேவு குலிசனும்
போதின்மேவுங் கமலனும்
பொன்மேவு மார்பனும் விண்மேவு தேவரும்
புகழ்மேவு தவமுனிவருந்
தாமேவு துயரக[ள](ல) வொளிமேவு கயிலையிற்
றழன்மேவு விழியாறினுந்
தாமேவு பொறியாறு மலர்மேவு சரவணத்
தடமேவு திருவுருவமாய்த்
தேமேவு வேலெடுத் தடமேவு சூரர்குல[ஞ்]
சிந்தலைச் சிதறவிடுவாய்
செடிமேவு பாசவினை பொடியாக வந்துனது
திருவருட் கருணைபுரிவாய்
தூமேவு தவமுனிவ ரெண்டிசைக் கிறையவருஞ்
சூழ்மண்ணிப் பாகைநகர்வாழ்
சொற்பொருளின் வடிவான தற்பர[க] கல்யாணசிவ
சுப்பிரமணியக் கடவுளே. (௧)

End:

பிணையுண்ட விழிவள்ளி தெய்வானை யென்னுமிரு
பிடியுண்டு வேலுமுண்டு
பேரருட் கடலான நீயுண்டு சன்[ன](னி)திப்
பிரபலமத னேகமுண்டு
கணையுண்டு சிலையுண்டு விழிபுருவ மெனவைத்த
கவரிதன் பாலுமுண்டாய்க்
கடுவுண்ட நாதனுங் குட்டுண்ட வேதன்முற்
கட்டுண்ட மாயனிமையோர்
[யி](இ)ணையுண்டெனற் கரிய நின்சேவை தெண்டனிட்
டின்பமுண்டாய் மகிழ்ந்தார்
[யி](இ)டருண்ட வெளியேனை யஞ்சலென வுனையன்றி
யெவருண்டெனக் கருள்செய்வாய்
துணையுண்டு வேல்நமக் கிணையில்லை யென்றன்பர்
தொழு(மண்ணிப்) பாகைநகர்வாழ்
சொற்பொருளின் வடிவான தற்பர கல்யாணசிவ
சுப்பிரமணியக் கடவுளே.

வேலுமயிலுந் துணை.

(கு-பு.)—

இது மண்ணிப்பாகை என்னும் ஊரிலுள்ள சுப்பிரமணியக்கடவுள் விஷயமான துதி. பத்துப் பாட்டாலாயது. ஒவ்வொரு பாட்டும் இறுதியில் 'சொற்பொருளின் வடிவான தற்பர கல்யாணசிவ சுப்ரமணியக் கடவுளே' என்பதை மகுடமாக வுடையது. செய்யுள் நடை சாதாரணமானது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை.

---

3. ŚIVA.

No. 1674. அருணாசலேசர்கலித்துறை.
ARUṆĀCALĒŚARKALITTUṞAI.

Pages, 4. Lines, 5 on a page.

Begins on fol. 56*a* of the MS. described under No. 186.

Complete.

A poem in ten stanzas of Kalitturai metre in praise of God Aruṇācalēśar of Tiruvaṇṇāmalai. Herein the author asks his mind to become a fit object of offering to God Aruṇācalēśar or to remain at least near him by being born in a corner of Tiruvaṇṇāmalai.

Beginning:

முடியாச் செனன மெடுத்தென்ன பெற்றென்ன முத்தியில்லை
விடியாப்பொழுது விடிகின்றதில்லை யிம்மேதினியி
லடியார்க்கடியான் றிருவடியான் றுய[ர் தன்னை]ராற்ற வந்த
படியர்ச் சமைந்து தி[ல்லே](றி)ருவண்ணாமலைப் பாதையிலே.

End:

ஊனாகிநின்று வுருவெடுத்தே னிவ்வுலகத்திலே
மாணர் கலவி மயக்கத்திலெய்தி மயங்குவனோ [வெள்ளை வாழ்வித்
வானோர்கள் போற்று மருணாசலரபிடேகத்திற்குத் [திடாய்]
தேனாய்ப் பிறந்து[ல்லே]நி றிருவண்ணாமலை யீசனுக்கே.

(கு-பு.)—

இது, திருவண்ணாமலையிற் கோயில்கொண்டிருக்கும் ஈசுவரன் விஷயமானது. இதில் மனத்தை நோக்கி, "அருணாசலேசருக்கு உபயோகப்படக் கூடிய ஒரு பொருளாக நீ ஆகவேண்டும்; அல்லது அருணாசலத்திலாவது அதன் சார்பிலாவது ஒரு பிறப்பைப் பெற்று நிற்கவேண்டும்" என்று கூறப் பட்டிருக்கிறது. இக்கருத்து, முதிர்ந்த பக்தியைக் காட்டுகிறது. இதிலுள்ள செய்யுளின் தொகை 10. செய்யுளில் பிழைகள் பலவுள. பிரதி சிதிலமாக விருக்கிறது.

No. 1675. அருணாசலேசர்கலித்துறை.
ARUṆĀCALĒŚARKALITTUṞAI.

Pages, 7. Lines, 12 on a page.

Begins on fol. 5*a* of the MS. described under No. 418.

Same work as the above, but with some variations in the reading.

(த-பு.)—

இது முன் பிரதி போன்றது. அதிலுள்ள அன்வே இதிலும் இருக்கிறது. இவ்விரண்டிற்கும் பாடபேதங்கள் சில உள.

No. 1676. அருணாசலேசர்விருத்தம்.
ARUṆĀCALĒŚARVIRUTTAM.

Substance, palm-leaf. Size, $10\frac{1}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages, 5. Lines, 7 or 8 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 43*a*. The other works herein are Dakṣināmūrtivākyampadināṟu 1*a*, Dakṣināmūrtiñāna Aḍukkunilai 10*a*, Bōgarpūjāvidhi 19*a*, Ānandakkaḻippu 37*a*, Meyñānakkuravañji 50*a*, Agattiyarrattinaccurukkam 58*a*.

Complete.

A eulogy on God Aruṇācalēśar of Tiruvaṇṇāmalai exhorting Him to come to the help of supplicant at the time of his death. The stanzas of this work are written in Āśariyaviruttam.

Beginning:

நினைவாகி மூல நிலையாகி நேச
நிசரூபமான வடிவே
மனமா[ய்கை](யை)மூடி யறிவே கலங்கி
மனமே மயங்கி வெகுவா
யினமோடிருந்து வவதிக்குலைந்து
எமதூத ரோடிவருமுன்
மனவேகமாக வருணசலேசர்
வரவேணுமெ[ந்த](ன்ற)னருகே. (க)

End:

அடிமூலவட்ட மதிவாறுதிட்ட
மரிதானவெள்ளை விடைமேல்
துடியானசத்தி சிவஞானமூலஞ்
சுகமான போகமதனு
வடியார்களுள்ளங் களிகூர்ந்துமேவு
மரனேயுன்னும மறவேன்
வடிவானசோதி யருணசலேசர்
வரவேணுமெ[ந்தத](ன்றன)ருகே. (கo)

Colophon:

முற்றிற்று.

(த-பு.)—

இது திருவண்ணுமலை அருணசலேசர் விஷயமான துதி; 'மரண காலத்தில் எனக்கு அனுக்கிரகிக்க வரவேண்டும்' என்று ஒருவர் பிரார்த்திப்பதாக உள்ளது. "அருணசலேசர் வரவேணுமென்றனருகே" என்பதை மகுடமாகவைத்துப் பாடப்பட்ட பத்து செய்யுட்கள் இதில் உள்ளன. இயற்றியவரின்னரெனத் தெரியவில்லை.

No. 1677. அவிநாசிநாதர் துதி.
AVINĀŚINĀTARTUDI.

Page, 8. Lines, 7 on a page.

Begins on fol. 161*a* of the MS. described under No. 383.

Contains stanzas 1 to 15.

A eulogy on God Avinaśinātar, a form of Śiva worshipped in Avināśi, Coimbatore district. The supplicant herein prays to Avināśinātar to come to his protection before the servants of Yama (the God of Death) approach him

Beginning:

அருமேவு பூவிலுறைவோனு மாலு
　　மறியாத வேத வடிவே
திருமேனி மீ[தில்](து)திருநீறணிந்து
　　சிவகாமிவல்லியுடனே
கருமேனிகொண்டு பொருகாலனூதர்
　　கடிகாதவோ[டி](டு) வருமுன்
மருமேவு சோலை ய[வ](வி)நாசிநாத[ர]
　　வரவேணுமெ[ந்த](ன்ற)னருகே. (௧)

End:

காவாய்புகுந்த கனைய[ந்த](ன்ற)னக்கு(க்)
　　கனிவந்துதாயரழவே
பரிவாய் வள[த்து](ர்த்த)தனையன் றிரும்ப(ப்)
　　பணிரண்டுவயதினுடனே
விரைவாய்மணஞ்செய் தருளும்படிக்கு
　　மிகுபாடல் நம்பி பு[கி](க)ர
வரவாயளிக்கும[வ](வி)நாசிநாத[ர]
　　வரவேணுமெ[ந்த](ன்ற)னருகே. (௧௫)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது அவிநாசி என்னுந் தலத்திலுள்ள சிவபெருமான் விஷயமான துதி. அப்பெருமானை 'அருகில்வந்து கிருபை செய்யவேண்டும்' எனப் பிரார்த்தித்து "அவிநாசிநாதவரவேணுமென்றனருகே" என்பதை மகுடமாகவும் அகராமுதலிய எழுத்துக்களை முறையே முதலெழுத்தாகவுமமைத்துப் பாடப்பெற்றுள்ளது. இந்தப் பிரதியில் 15 பாடல்களே இருக்கின்றன. பாடல்கள் சாமானிய நடையுடையன. 14, 15 ஆம் பாட்டுக்கள் முன்பின் கைமாற்றி எழுதப்பட்டிருக்கின்றன.

No. 1678. அவிநாசிநாதர் துதி.
AVINĀŚINĀTARTUDI.

Pages, 4. Lines, 10 on a page.

Begins on fol. 123*a* of the MS. described under No. 1157.

Contains the first ten stanzas.

Same work as the above.

(த-பு.) —

இது முன் பிரதி போன்றது. ஆயினும் இதில் முன் பிரதியிலுள்ள முதற் பத்துச் செய்யுட்கள் மட்டும் இருக்கின்றன.

No. 1679. அவிநாசிநாதர்துதி.
AVINĀŚINĀTARTUDI.

Pages, 5. Lines, 80 on a page.

Begins on fol. 38*a* of the MS. described under No. 1294.

Contains the first ten stanzas.

Same work as the above.

(த-பு.)—

இது முன் பிரதி போன்றது. செய்யுட்கள் அதில் உள்ள அளவே இதிலும் இருக்கின்றன.

No. 1680. ஆயிரத்தெட்டுச்சிவாலயப்பாடல்.
ĀYIRATTEṬṬUŚIVĀLAYAPPĀḌAL.

Pages, 4. Lines, 5 on a page.

Begins on fol. 46*a* of the MS. described under No. 186.

Incomplete.

In praise of the sacredness and religious sanctity of 1,008 holy Śaiva shrines. The MS. under notice contains a portion only and a few of these shrines, including especially Madura, are described and eulogized herein.

Beginning:

அருணகிரி காசிகா ளத்திகாஞ்சி
யாலங்கா டிடைமருது ராரூர் வேளூர்
திருமுதுகுன் றெற்றியூர் குடந்தை காழி
செங்காடு வெண்காடு திருவையாறு
தருமபுர மாவடுதூர் தண்ட லேயூர்
சாயக்காடு மறைக்காடு சத்திமுற்றம்
பொருவில்வலஞ் சுழி யதிகை வீரட்டானம்
பூந்துருத்தி வெண்ணெய்நல் லூர் கண்டிகொல்கா.

End:

சரமசா திரந்தரனே போற்றி போற்றி
சந்த்ரகுலதுரந்தரனே போற்றி போற்றி
சருகிகுண . . . .
. . . . மூ விலேச்சூலப் படையாய் போற்றி

தரையிலெண்ணெண் விளையாடல் புரிந்து சங்கத்
தமிழ்வாணர்க்காய்நின்ற தலைவா போற்றி
யருளரசனெனு மதுரை நீதா போற்றி
யாதிசொக்க நாதனே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

சொக்கனென் றொருகாலோதத் துயர்கெடும் பவங்கடேருந்
சொக்கனென் றொருகாலோதச் சுருதிபல்லாண்டு சொல்லுஞ்
சொக்கனென் றொருகாலோதத் தொலைவிலாச் செல்வமுண்டாஞ்
சொக்கனென் றொருகாலோதச் சொ[ற்](ர்க்)கமு மெளிதா
[மன்றே

(கு-பு.)—

இதில், சிறந்த சிவாலயங்கள் ஆயிரத்தெட்டில் சிலவற்றைக் கூறிப் பின்பு மதுரையைப் புகழ்ந்து கூறி 'இத்தகைய பல தலங்களிலும் அடியார்க்கருள் புரியும்பொருட்டு வீற்றிருக்கும் பிரானே போற்றி' என மதுரைச் சொக்க நாதர் துதியும் அமைந்துள்ளது. செய்யுள் நடை தாழ்ந்தது. பிழைகள் பலவுள. இதனிறுதியிலுள்ள "சொக்கனென்றொருகாலோத" என்னுஞ் செய்யுள் வேம்பத்தூரார் திருவிளையாடலில் உள்ளதாகும்.

No. 1681. உதவுப்பத்து. UDAVUPPATTU.

Pages, 5. Lines, 8 on a page.

Begins on fol. 15*a* of the MS. described under No. 314.

Complete.

This is the original of the work described under R.No. 302 (e) of the Triennial Catalogue of MSS., Part II, Tamil.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 302 (e) நம்பர் பிரதியின் மூலப்பிரதி இதில் இது முற்றும் உள்ளது.

No. 1682. கச்சபேசர்தோத்திரம், KACCAPĒŚARTŌTTIRAM.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 435*a* of the MS. described under No. 1272.

Complete in ten stanzas.

A eulogy on Kaccapēśar, a form of Śiva, worshipped in a shrine at Conjeeveram. At the end of the work there are three stanzas giving the date of death of Kacciyappamunivar and Śivañānamunivar.

Beginning :

திருமாலொடு நான்முகன் தேடித் திகைத்துவாட
வருமாமறை மீதுநின் னன்ப ரகத்தினுள்ளு
மருவாரும்ப லாசின்றண் ணீழலு மன்னியென்றும்
பெருவாழ்வுற லென்கச்சபேசம் பிறங்குதேவே. (க)

பிறங்கும் புலனைந்தின்வழிப் பெயர்ந்தோடியோடிக்
கறங்கு கன்னச்சுழலு மென்னுள்ளங் கலங்கிடாம
னிறங்கொண்ட நின்பாதத்தழுந்த நிறுத்தியாளா
யறங்கொண்டொளிர் கச்சபேசத்தழகம்மை வாழ்வே. (உ)

End :

அன்றேமலத் தாண்டனைபேரின் பளிப்பையென்றே
யுன்றாள்கடு நித்தித காறுமின் பொன்றுகில்லே
னன்றேங்குறுங்கச்சபேசத்துறை நம்பனே நீ
யின்றாகிலும் பேரின்ப வெள்ளத் திருத்தி யாளே. (க0)

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது காஞ்சீபுரத்தில் உள்ள கச்சபேசரென்னும் சிவபிரான் விஷயமானது. இதில் உள்ள செய்யுட்கள் பத்து. செய்யுள் நடை சிறந்தது. இது வரை அச்சிடப்படாதது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை

இந்நூல் பூர்த்தியான பின், திருவாவடுதுறைக் கச்சியப்பமுனிவர், சிவஞான முனிவர் ஆகிய இருவரும் சமாதியடைந்த காலத்தைக் குறிக்கும் 3 பாடல்கள் உள. அவை வருமாறு :—

“ ஏர்தருசாலிவாகன சகாத்தமாயிரத்தெழுசதத் தொருபத்
திரண்டின்மேற் சாதாரணவருடத்தோடியை தருசித்திரைத்திங்கள்
சார்தருதெய்திபத்திஞெ[ன்]டான்று தகுஞ்செவ்வாய்வாரம் பூர்வத்துச்
சத்தமிபுனர் பூசத்திருநாளிற் சார்தருகும்பலக்கினத்திற்
சீர்தருதுறைசை நமசிவாயன்றன் திருப்புகழுலகினிற்றுலக்கித்
திகழ்ந்துளகச்சியப்ப தேசிகனற்றிருப்பெருங்காஞ்சியினெய்திச்
சேர்தருமடியார் தமக்க கவிருளைத்தினகரன் முன்னிருளென்னத்
திருந்துதன்னருளாலகற்றி வீடுறுத்திச் சிறந்தபூரணத்தடைந்தனனே.

மன்னும் விசுவா வசு மே டத்திங்க[ள்]
ஞன்னிரவி நாட்பகலோ தாயிலியந்—தன்னிற்
றிருவாள னெங்கோன் சிவஞான தேச(வ)ன்
திருமேனி நீங்குந் தினம்.

வருடஞ்சா தாரணவா மன்னு திங்கண் மேடந்
திருநாட் புனர் பூசஞ் சேர்ந்தார்க்—கருளாற்
கருவே ரறுத்தருளெங் கச்சியப்ப தேவன்
றிருமேனி நீங்குந் தினம்.

No. 1683. கச்சபேசர்தோத்திரம்.
KACCAPĒŚARTŌTTIRAM.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 54a of the MS. described under No. 270.

Complete.

Same work as the above.

(கு-பு.(—

இது முன் பிரதி போன்றது. இதில் இந்நூல் முற்றும் உள்ளது.

No. 1684. கச்சபேசர்தோத்திரம்.
KACCAPĒŚARTŌTTIRAM.

Pages, 6. Lines, 5 on a page.

Begins on fol. 4a of the MS. described under No. 337.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இதுமுன் பிரதிபோன்றது. முற்றுமிருக்கிறது. பிரதி சிதிலமாயிருக்கிறது.

No. 1685. கச்சியானந்தருத்திரேசர்கீர்த்தனை.
KACCIYĀNANDARUTTIRĒŚARKĪRTTANAI.

Pages, 2. Lines, 7 on a page.

Begins on fol. 434a of the MS. described under No. 1272.

Complete.

A musical composition in praise of Ānandarudrēśar, a form of God Śiva, worshipped in Conjeeveram. This work has not been printed and the name of the author is not given.

Beginning :

(பல்லவி)

எனிந்தப் பெண்ணணிணையிடத்திலேவைத்தங்
கிருக்கிறீர் மெசாலுமையரே

(அநுபல்லவி)

தேனந்துமலர்செறி வானந்த முயர் சோலை
தானந்த முறுங்கச்சி யானந்த ருத்திரேசரே (எனிந்தப்)

End :

(சரணம்)

இமையகிரியுதவு முமையிடத்தி லுயிர்
இன்பந்தழையு மென்றோ,
எழையடியார்க் கெல்லாந்தமது
ளத்திருணீக்கிச்

சமயிரு வினையாக்கிச் சமையமீதென நோக்கிச்
சத்தினிபாதமாக்கவோ—
ஏனிந்தப் பெண்ணினை (. . . . . . .) ஆன
ந்தருத்திரேசரே—(ஏனிந்தப்)

Colophon:

கீர்த்தனை முற்றும்.

(கு-பு.)—

இது காஞ்சீபுரத்திலுள்ள ஆனந்தருத்திரேச ரென்னும் சிவபிரான்மீது இயற்றப்பட்டது. நல்ல நடையுடையது. இஃதின்னு மச்சிடப்படவில்லை. இயற்றியவர் பெயர் தெரியவில்லை.

No. 1686. காசிக்காலபைரவர்பதிகம்.
KĀŚIKKĀLABAIRAVARPADIKAM.

Pages, 7. Lines, 4 on a page.

Begins on fol. 14*a* of the MS. described under No. 283.

Wants four stanzas in the beginning.

A work in verse in praise of Kalabhairava, a manifestation of Śiva, worshipped in a shrine at Kāśi or Benares. The name of the author is not given. The work has not been printed.

Beginning:

குருதுடனைம்பன்னு வோர்பயந் துய்யவே
கோகனக னோர்சிரத்தைக்
கொய்துசெங்கையிற் பிடித்துநின் றுயருள்
கோவிலுறை லிங்கவடிவிற்
றருகேச மில்லாத பொய்பயந் துய்யவே
சண்டனை யுதைத்தடித்தாய்
சங்கம துரோகிகள் பயந்திடப் பச்சைமா
றனையுரித் தேதரித்தா
யுருவான மூவடிவி லன்பிலோர்க் கின்னநீ
யுக்ரதிரி சூலம்வைத்தா
யுன்கருணை ரசமிகுங் கோபரசம் வீரச
மொருவர்களுரைக்க வசமோ
கருநீல கண்டகங்காதரா த்ரியம்பகா
கயிலாச கிரிகாவலா
காசியெனு மொருவாரணாசிநக ரானந்த
காலவயிரவநாதனே (௬)

End:

பரிவினுடன் யான்மூழ்கு தீர்த்தமெல்லாநினது
பண்புதரு கங்கையென்பேன்
பகாவருமுத்தலத் தெத்தலமு முத்தநின்
பத்தர்பணி காசியென்பேன்

குருலிங்க சங்கமத் தின்பூசை நின்பதங்
கும்பிடுதே லென்று[ளே](ழை)ப்பேன்
கொள்ளைமா தவமெலா நின்னடியர் தாடலைக்
கொள்வதே யென்றுகொள்வேன்
(அரிபி)ரமர் பணிகாசி நகரையென் மரணபரி
யந்தமக லாதிருந்தே
யதிமதுர கவிமாலை யாலுனை யலங்கரித்
தானந்த வுல்லாசமாய்க்
(கரு)ணையங் கடலிற் படிந்துவினை யாடக்
கடாட்சம்வைத் தருள்குருபரா
காசியெனு மொருவார ணாசிநக ரானந்த
காலவயி ரவநாதனே. (கக)

(கு-பு.)—

இது காசி க்ஷேத்திரத்திலுள்ள காலவைபரவமூர்த்தியின் துதி; சுவையமான நடையுடையது; "காசியெனுமொரு வாரணாசி நகரானந்த, காலவயிரவ நாதனே" என்னும் மகுடத்தையுடைய செய்யுட்களாலாகியது; இந்தப் பிரதியில் முதல் நான்கு செய்யுட்கள் இல்லை. இ'.து இதுவரை அச்சிடப் படவில்லை. இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை.

No. 1687. காயாரோகணேசர்தோத்திரம்.
KĀYĀRŌHAṆĒSARTOTTIRAM.

Pages, 6. Lines, 10 on a page.

Begins on fol. 57*a* of the MS. described under No. 270.

Complete in ten stanzas of Andādi form of composition.

A eulogy on Kāyārōhaṇēsar, a form of God Śiva as worshipped in a shrine at Conjeeveram.

Beginning:

பூமே லயனுந் திருமாலும் புள்ளைப் புள்ளும் பன்றியுமாய்த்
தாமேல் கீழும் பறந்தகழ்ந்துந் தமது வலியாற் காண்பரியாய்
காமே லோங்குங் திருக்காஞ்சிக் காரோணத்தென் கண்குளிர
நீமே வியிருந் துன்னருளா லின்னைக் காண்பித் ததற்புதமே. (க)

End:

வாயிற் றுதிக்கு மெனைமயல்செய் மாயை யகற்றி வெளிசெய்து
பேயாய்ப்பிரமம்யா னென்னும் பித்தற்றன்னை ருளீந் திறமாய்த்துத்
தாயா யிரங்கிப் பேரின்பந் தாராய் காஞ்சிக்கா ரோணத்
தூயாய் மறையின் முடிமீதுந் தொண்ட ருளத்து மலர்பூவே. (கo)
திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது காஞ்சிபுரத்துள்ள காயாரோகண மென்னுந்தலத்திலமர்ந்திருக்கும் சிவபெருமான் விஷயமான தோத்திரம். அந்தாதித்தொடையாகவுள்ள பத்துச் செய்யுட்களாலாயது. செய்யுள் நடை நன்றாகவிருக்கின்றது. இயற்றியவர் பெயர் விளங்கவில்லை.

No. 1688. காயாரோகணேசர்தோத்திரம். KĀYĀRŌHAṆĒŚARTŌTTIRAM.

Pages, 2. Lines, 12 on a page.

Begins on fol. 425a of the MS. described under No. 1272.

Complete.

Same work as that described above.

இது முன்பிரதி போன்றது. இந்நூல் இந்தப் பிரதியில் முற்றுயிருக்கிறது.

No. 1689. காயாரோகணேசர்தோத்திரம். KĀYĀRŌHAṆĒŚARTŌTTIRAM.

Pages, 4. Lines, 7 on a page.

Begins on fol. 33a of the MS. described under No. 1185.

Contains the first six stanzas and a portion of the seventh stanza.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இந்தப் பிரதியில் இந்நூலின் முதலாறு பாடல்களும் ஏழாவது பாடலின் முதலடியும் உள்ளன.

No. 1690. கைலாசத்திருப்பதிகம். KAILĀSATTIRUPPATIKAM.

Substance, palm-leaf. Size, $8\frac{1}{8} \times 1$ inches. Pages, 14. Lines, 6 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 58a. The other work herein is Nakṣattiramālai 1a.

Complete.

A poem in eleven stanzas in praise of God Śiva Some of the stanzas are found to be the same as those found in the Kadirkāmattēvāram, described under No. 1631. The ending lines of the stanzas in both the works also agree. At the end of the work there is a stanza of Sundaramūrtināyaṉār.

Beginning:

கரைமருவுந் திருமழுவு முழையு மேந்திக்
கட்செவியுங் குண்டலமுங் குழையு மாடத்
திரைமருவு சடைமுடியு மிதழித் தாருஞ்
சிறுபிறையும் வரியரவுஞ் சீறி யாடத்
திருமருவு மாலயனுந் தேடிக் காணுத்
திருவுருவின் சிலையானைத் தேவர் தேவைக்
குரைகடல்சூ முலகாளுங் குன்றில் வேந்தைக்
கும்பிட்டே னென்பிறவி பின்விட் டேனே. (க)

End :

தானந்த மானதிரு வடிவு கொண்டு
சற்குருவாய்த் திருவடியென் றலைமேல் வைத்த
வானந்தக் கூத்துகந்து வந்து தோன்றி
யருநரகப் பிறவிதனைக் கப்பா லாகி(த்)
தேனந்து மலர்ச்சோலைக் குன்றில் வேந்தைத்
திருவுருவின் சிலையானைத் தேவர்தேவை
நானந்த மானசிவ வீடளிக்கு
நாடரிய பரமகுரு நடி னோர்க்கே. (கக)
முற்றும்.

(கு-பு.)—

இது சிவபெருமான் துதி; இந்நூற் பாடல்களிற் பெரும்பாலும், 'குன்றில் வேந்தை' என்றும், 'திருவுருவின் சிலையானை' என்றும் வருகின்றன. இது பதினொரு பாடல்களாலாகியது. முதலில் உள்ள பத்துப்பாடல்களும் "குன்றில்வேந்தைக் கும்பிட்டே னென்பிறவி பின்விட் டேனே" என்ற மகுடத்தை யுடையன.

இந்நூல் முற்றுப்பெற்ற பின்பு, "முத்தாமுத்தி தரவல்ல" என்ற சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம் எழுதப்பெற்றிருக்கிறது.

இந்நூலுக்கும் 1631 நம்பரில் வந்துள்ள கதிர்காமத் தேவாரம் என்னும் நூலுக்கும் மகுடம் ஒன்றாயிருப்பதோடு, இந்நூலின் 1, 2, 6, 7, 9-வது செய்யுட்கள் ஷை தேவாரத்தின் 2, 4, 1, 5, 6-வது பாடல்களோடு ஒத்திருக்கின்றன; இது கவனிக்கத்தக்கது.

No. 1691. கைலாசநாதர்தோத்திரம்.
KAILĀSANĀTARTŌTTIRAM.

Pages, 6. Lines, 10-11 on a page.

Begins on fol. 87*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as that described under R. No. 293 (g) of the Triennia Catalogue of MSS , Vol. II.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 293 (g) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முழுதுமிருக்கிறது.

No. 1692. கைலாசநாதர்தோத்திரம்.
KAILĀSANĀTARTŌTTIRAM.

Pages, 4. Lines, 9-10 on a page.

Begins on fol. 34*a* of the MS. described under No. 271.

Complete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமுள்ளது.

No. 1693. சிதம்பரச்செய்யுட்கோவை.

CIDAMBARACCEYYUṬKŌVAI.

Substance, palm-leaf. Size, 9⅞ × 1½ inches. Pages, 42. Lines, 10 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, new.

Begins on fol. 38*a*. The other works herein are Śalliyanūl 1*a*, Oṭṭiyanūl 26*a*.

Complete.

A eulogy on God Śiva, worshipped under the name of Naṭarāja in the sacred shrine at Cidambaram. The stanzas of this work are written with a view to illustrating the different kinds and classes of metrical composition in Tamil poetry. The author is Kumara Guruparasvāmigaḷ. The work has been printed. Each stanza is followed by explanation in prose of the metres, etc., illustrated by it.

Beginning:

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
வாங்கொன்றைக் கண்ணி யவர்.

இது, சீர்முழுதும் எதுகை யொன்றத் தொடுத்தமையாற் றலையாகெதுகை, 'பூங்கொன்றைக் கண்ணியான்' எ-ம் 'பொன்மன் றிறைஞ்சிடுக' எ-ம் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையும் விரவிவருதலின் இஃதொழுகிசைச்செப்பலோசைத்து; இதனானேவெண்பா இரண்டடிச்சிறுமை யுடைத்தென்பதூஉங் கொள்க.

இதனுட் கண்ணியவர் என்னும் ஒருமொழியைக் கண்ணி யெனவும் அவரெனவும் வகையுளி செய்து சீர்கொள்ளப் படுதலின் இது மலரென்னும் வாய்பாட்டான் முடிந்த ஒருவிகற்பக் குறள்வெண்பா. (க)

அறனன்று மாதவ னென்ப துலகெந்தை
தாள்காணார் நாணுக் கொள.

இது இருவிகற்பக்குறள்வெண்பா. மோனை முதலியதொடையும் தொடை விகற்பமும் போலாது தொடுத்தமையால் இது செந்தொடை. (உ)

கண்ணுதல் காட்சி கிடைத்த விழிக்கில்லை
வெல்கூற்றின் ஞேற்றங் கொளல்.

இதுவுமது.

அனுவெழுத்தால் இணைமோனை யமைத்து எனைத்தொடையும், தொடை விகற்பமும்போலாது தொடுத்தமையால், இது செந்தொடை. (௩)

End:

அரசியல் கோடா தானடியார்ப் பேணு
முரசிய ஞானவேன் மன்னர்—பரசோன்
கழலிணை பொதுவில்காப் பாக
வழிவழி சிறந்து வாழியர் பெரிதே.

இது முன்னர் வெண்பாவும் பின்னர் அகவலும் புறநிலைவாழ்த்தாய் வருதலின் புறநிலைவாழ்த்துமருட்பா. வெள்ளடியும் ஆசிரியவடியும் சமமாகவின் இது சமனிலை. (அக)

(* * * *)

ŚIVAÑĀNAMUNIVARTUDI.

Pages, 2. Lines, 11 on a page.

Begins on fol. 69*a* of the MS. described under No. 12:9.

Same work as the above.

The MS. described under R. No. 334 (*e*) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2 has been copied from this MS.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 334 (e) நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இதில் இரண்டு பாடல்களும் இருக்கின்றன.

No. 1786. சிவப்பிரகாசர் ஊஞ்சல்.

ŚIVAPPIRAKĀŚAR ŪÑJAL.

Pages, 4. Lines, 6 on a page.

Begins on fol. 53*a* of the MS. described under No. 82.

Complete in ten stanzas.

In praise of Śivappirakāśar, a learned Śaiva devotee of Tiruvaṇṇāmalai, who is here considered to be resting on a swing. The name of the author is not known; but he refers in the last stanza to a prince named Vēṅkaṭācala who probably patronised him.

Beginning :

முந்துமறைப் பொருளாகி யெல்லையு மாகி
　　முதலீறு மிலவாகி முதன்மை யாகிப்
பந்தமறுத் துயிர்க்குல மளிப்பான் ஞானப்
　　பரமகுரு வடிவாகிப் பரிவு கூர்ந்து
வந்தசிவப் பிரகாசச் சாமி பாத
　　மலரடியைச் சொலுமூஞ்சன் மாலை பாடக்
கந்தனுக்கு முன்னவனுஞ் சிவப்பிர காசக்
　　கற்பகத்தின் பற்பபதங் காப்புத் தானே. (௧)

செம்பவளக் காணிறுவி யொளிகொள் வச்சிரந்
　　திரட்டுவிட்டம் போட்டுமணிப் பலகை சேர்த்துப்
பம்புமொளி மரகதத்தாற் கொடுங்கை பூட்டிப்
　　படருமொளி மாணிக்கத் தவிசு பாய்ச்சி
யும்பர்புக ழாணிமுத்தின் வடங்கள் பூட்டி
　　யொருகுமெத்தை யலங்கார வூஞ்சன் மீதி
லம்புவியோர் புகழருணை மேவு மெங்க
　　ளருட்சிவப்பிர காசகுரு வாடி ரூஞ்சல். (௨)

End :

பார்வாழி விண்வாழி யுயிர்கள் வாழி
　　பரமசிவ னடியார்கள் பலரும் வாழி
யேர்வாழி வேங்கடா சலம கீப
　　னெ[ன்னு](ந்நா)ளும் பூவுலகி லிருந்து வாழி
கார்வாழி மறைகளா கமங்கள் வாழி
　　கண்டிகைநீ றொடுபஞ்சாக் கரமும் வாழி
சீர்வாழி சன்னிதிச்சங் கமர்கள் வாழி
　　சிவப்பிரகா சையன்சே வடிகள் வாழி. (௧௦)

(த-பு.)—

இது திருவண்ணாமலையிலிருந்த 'சிவப்பிரகாசர்' என்னும் பெரியாரது துதி ரூபமானதொரு ஊசற்பிரபந்தம். காப்பு, வாழ்த்தும் உள்படப் பத்துச் செய்யுளாலாயது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. செய்யுள் நடை சிறந்தது. அச்சிடப்படவில்லை.

இறுதியிலுள்ள வாழ்த்துச் செய்யுளால் வேங்கடாசல மென்னும் பெயரையுடைய ஒரு பிரபு இந்நூலாசிரியர்க்கு உதவி புரிந்தவனென்று ஊகிக்கக் கிடக்கிறது.

No. 1787. ஞானப்பிரகாசர் தோத்திரம்.

ÑĀNAPPIRAKĀŚAR TŌTTIRAM.

Pages, 55. Lines, 7 on a page.

Begins on fol. 9*a* of the MS. described under No. 1294.
Complete in one hundred and two stanzas.

A eulogy on Ñānapprakāśar, the head of the Śaiva Mutt at Trinvalore. He is conceived as Śiva himself and the means of attaining salvation by the worship of Śiva are described herein.

Beginning:

சித்தி தருநாதன் தெனக[யி](ம)லை வாழ்நாதன்
பத்திதரு நாதன் பரநாதன்—முக்திப்
பெருநாதன் ஞானப் பிரகாச னுண்மை
தருநாதன் சற்குருநா தன்.

பரம ரகசியத்தைப் பாழான வாயா
விரவுபக லெந்நேர மின்றிக்—குரவெரியக்
கூப்பிட்டுங் காணுமோ கோலமுமட நெஞ்சேமால்
பூப்பிட்டுங் காணுப் பொருள். (௪)

End:

ஊநதறிவார் கண்டாலு மாரேனுஞ் சொற்று லு
மெந்த விருப்புவெறுப் பேய்ந்தாலும்—சிந்தையே
பார விசாரத்தைப் பண்ணுதே யேதேனுந்
தீர விசாரித்துச் செய். (௬௯)

இல்லைவனங் காசி திருவாரூர் மாயூர
முல்லைவனங் கூடல் முதுகுன்ற—நெல்லைவனங்
காஞ்சிகழுக் குன்ற மறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென முத்தி வரும். (௱)

நன்கருத்தே தென்கமலை ஞானப் பிரகாசனே
யென்கருத்தை யுன்கருத்தென்றே . . . மே—லென்கருத்தை
யென்கருத்தென் றெண்ணி யான்பட்ட துன்பமெலா
முன் . . . . வறியும். (௱௧)

Colophon:

சாதாரண ௵ வையாசி ௴ 20௳ எழுதி நிறைந்தது.
மு[த்து](ற்று)ம்.

(கு.பு.)—

இந்நூல், திருவாரூர் ஞானப்பிரகாசர் விஷயமானது. அவரைச் சிவபெருமானுகவே பாவித்துத் துதிக்கப்பெற்றதுடன், சிவபெருமானை வழிபட்டு உய்யுமுறைமையையுங்கூறுவது. காப்புச் செய்யுளுடன் நூற்றிரண்டு வெண்பாக்களையுடையது. இயற்றியவர் ஞானப்பிரகாசரின் சிஷ்யர்களுளொருவரெனத் தோற்றுகிறது. செய்யுள் நடை நன்றாகவிருக்கிறது. இந்தப்பிரதியில் முற்றுமுள்ளது.

No. 1788. தவப்பிரகாசர்துதி.

TAVAPPIRAKĀŚARTUDI.

Pages, 8. Lines, 10 on a page.

Begins on fol. 81*a* of the MS. described under No. 270.

Complete.

Same work as that described under R. No. 293*d* of the Triennial Catalogue of MSS. Vol. II.

After the end of this work, there are three additional stanzas in praise of Tavappirakāśar.

(கு-பு.)—

இது மூவருடத்திய காட்லாக் 293(d) நம்பர் பிரதி போன்றது. இதில் இந்நூல் முற்றும் இருக்கிறது.

இது பூர்த்தியானவுடன் ஷெயார் பேரில் பாடல் மூன்றுள்ளன.

No. 1789. திருஞானசம்பந்தர்துதி.
TIRUÑĀNASAMBANDARTUDI.

Substance, palm-leaf. Size, 11¼ × 1 inches. Pages, 37. Lines, 4 on a page. Character, Tamil. Condition, injured. Appearance, old.

Begins on fol. 13a. The other works herein are: Aṅgālamman padikam 1a. Tiruñānasambandar Tōttira Kīrttanai 7a. Kapālīśvarar Kīrttanai 18a.

Complete in ten stanzas.

A eulogy describing the leading incidents in the life of Tiruñānasambandar of Śīrkāḻi, one of the 63 Tamil Śaiva devotees and the author of a portion of the Tēvāram.

Beginning:

திருஞானசம்பந்தசுவாமிகள்பேரில் துதி.

ஆசிரியவிருத்தம்.

சீர்வளருங் காழியில்வாழ் கவுணிய கோத்திரச்
சிவபாத விருதயருஞ் சிறப்பின் மிக்க
வேர்வளரும் பகவதியார் தாமுஞ் செய்த
வெண்ணரிய தவப்பேற்று லின்புற் றிந்தப்
பார்வளர வாதிரைநா ளவதரித்துப்
பருவமூன் றதனிலுமை பாலுண் டோங்கும்
பேர்வளரு ஞானசம் பந்த ரென்னும்
பிள்ளையார் கழலிணையைப் பேணி வாழ்வாம். (க)

End:

திருநல்லூர்ப் பெருமணம்வாழ் நம்பாண் டார் மூற்
செனனுந் தாங்கடொறுஞ் செயுந்த வத்தாற்
றரும்புதல்வி தனைமணந்தக் கோலத் கோடுந்
தந்தைதாய் மனைவிசுற்றஞ் சாரு மன்பர்
விரும்பியுடன் வந்திடவப் பெரும ணத்தார்
மெய்ச்சோதி யுடன்கலந்து விளங்கு மெங்கள்
பெருவாழ்வாம் ஞானசம் பந்த ரென்னும்
பிள்ளையார் கழலிணையைப் பேணி வாழ்வாம். (ம)

(கு-பு.)—

இது சைவசமயாசாரியருள் ஒருவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விஷயமானது. அவர் பிறந்தது முதல் முத்திபெற்றதிறுதியாகவுள்ள வரலாற்றையும் இடையே அவர் செய்த பல அற்புதச் செயல்களையும் சுருக்கிக் கூறும் பத்து ஆசிரியவிருத்தங்களாலாயது. செய்யுள் நடை சாதாரணமானது. இயற்றியவ ரின்னாரென்று தெரியவில்லை. இந்நூல் இந்தப் பிரதியில் பூர்ணமாகவுளது.

No. 1790. திருஞானசம்பந்தர் தோத்திரக்கீர்த்தனை.
TIRUÑĀNASAMBANDAR TŌTTIRAKKĪRTTANAI.

Pages, 10. Lines, 4 on a page.

Begins on fol. *7a* of the MS. described under No. 1789.

Complete.

Similar to the above. The mind is addressed herein with a view to worship Tiruñānasambandar.

Beginning:

திருஞான சம்பந்த[ர்]சுவாமிகள சரித்திர தோததிரம் விருத்தம்.

இருநிலத்தி லுறுமளவு மெண்ணரிய பெருஞ்செல்வ மெய்திப்பின்னர்
அருமறைகள் புகழ்கயிலை யத்தனடி நீழலின்கண் ணமரச்செய்யும்
திருவளருங் காழியில்வாழ் திருஞான சம்பந்தர் சீரைப்பாடி
யுருகியவன்புட னன்னோர்பொற் கழலேயேத் துவையேலுன்னு ணெஞ்சே.

கீர்த்தனை.

இராகம் - கலியாணி - ஆதிதாளம்.

பல்லவி.

ஞானசம்பந்தர் திருவடிபூசித்தால், நன்மைபெற்
றுய்யலாம்—நெஞ்சே.

அநுபல்லவி.

வானளாவியசோலை மாடமாளிகைசூழும்
வளமும்பன்னிருபேரு மருவும்சீகாழிவாழும் (ஞான)

ச[ற](ர)ணங்கள்.

பார்புகழ் மறையோரீர் கவுணியகோத்திரச் சிவ
பாதவிருதயரும் அவர் பத்தினியாம்பக வதியாருஞ்,
செய்தவப் பயனுலண்டத்தவரும்,
ஆர்வமுறவாதிரை நாளிலுதித்தந்த ஆண்டுமுதல்
மூவாண்டில் அன்னையுமையாள்தந்த, பேர்வளர்
ஞானப்பா லருந்திச்சிவானந்தப் பெருமான்பாற்
கோலக்காவிற் பொற்றாளம் பெற்றுவந்த (ஞானசம்பந்தர்)

End:

திருமயிலையிற்சிவ நேசச்செட்டியார்முன்
செய்தவக்கொடியொன்று சர்ப்பந்தீண்டவவரங்கத்தை
மீண்டும்பூம்பாவையாச் செய்தப்பதியையகன்று
பெருமணநல்லூரில் நம்பாண்டாரெனுமொரு
பெரியோர்பெண்ணை மணம் புரிந்தபின்னதில்வரு
மிருவினையாகாதென் றவரோடின்பந்தரு
மெந்தைசபாநாதரிணையடி சேர்திரு ஞானசம்பந்தர்
திருவடிபூசித்தால் நன்மைபெற்றுய்யலாநெஞ்சே.

திருச்சிற்றம்பலம்.

(கு-பு.)—

இது சைவசமயாசாரியராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் விஷய மானது. அவர் பிறந்தது முதல் முத்திபெற்ற வரையுள்ள சரித்திரத்தைச் சுருக்கமாக அமைத்து, 'அவரைப் பூசித்தால் நன்மை பெறுவாய்' என்று மனத்தைப் பார்த்து ஒருவர் சொல்வதாகச் செய்யப்பட்டுள்ளது. 'கீர்த்தனை' என்னும் இசைப்பாட்டாலாயது. கீர்த்தனை தொடங்குமுன், அவரைத் துதிப்பதால் வரும்பயனை யுணர்த்தும் ஆசிரியவிருத்தமொன்றுளது. இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 1791. திருத்தொண்டர் திருநாமக்கோவை.
TIRUTTONDAR TIRUNĀMAKKŌVAI.

Pages, 3. Lines, 8 on a page.

Begins on fol. 184*a* of the MS. described under No. 304.

Complete.

A stanza embodying the names of the 63 Tamil Śaiva devotees by Śivañānamunivar of Tiruvāvaduturai. The work has been printed.

Beginning :

(காப்பு).

மெய்யன்பர் நா(ம)மெல்லாம் வெவ்வேறு போற்றிடவைங்
கையன் றிருவடியே காப்பு.

(நூல்).

தில்லைவாழந்தணர்கள் சீர்நீல கண்டனு
ரில்லை யளித்த வியற்பகையார்—தொல்லை
யிளையான் குடிமாறன் மெய்ப்பொருளார்க்கென் று
மிளையா விறன்மிண்டரென்ப—வளவுமமர்
நீதி யெறிபத்தர் நீண்டபுக ழேனாதி
நாதர்திருக் கண்ணப்பர்நன்கலையர்—மேதக்க

End :

சிந்தனைசெய்திந்தத் திருநாமக் கோவைதனை
மந்திரமாக்கொண்டு மயிர்சிலிர்ப்ப—நைந்துருகி
மெய்யன்பா வென்றும் விளம்பப்பெறுவார்கள்
கைதவமும் புல்லறிவுங்கற்பனையு—மையலுந்தீர்த்
தத்துவிதா னந்த வகண்டபரிபூரணத்து
ணித்தியமா வாழ்வார் நிசம்.

Colophon :

குருபாதமே துணை.
திருச்சிற்றம்பலம்.
மார்கழிமீ உ௨ முற்றும்.

(கு-பு.)—

இஃது, சிவனடியார்களாகிய நாயன்மார்களனைவர் பெயரையும் வரிசை யாகக் கூறும் ஒரு கலி வெண்பா. இதனை யியற்றியவர் திருவாவடுதுறைச் சிவஞான முனிவர். அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதி பூர்த்தியுடையது.

No. 1792. இட்டகாமியமாலை.
ITTAKĀMIYAMĀLAI.

Substance, palm-leaf. Size, 12 × 1 inches. Pages, 32. Lines, 5 on a page. Character, Tamil. Condition, slightly injured. Appearance, old.

Incomplete.

Same work as that described under R. No. 328*a*, which is only a copy made from this one.

(த-பு.)—

இது மூவருடத்துக் காட்லாக்கின் 328a நம்பர் பிரதியின் மூலப்பிரதி. இந்நூல் அதிலுள்ள அளவே இதிலும் உள்ளது.

No. 1793. குருமொழிவெண்பா.
GURUMOLIVENBĀ.

Pages, 6. Lines, 6 on a page.

Begins on fol. 171*a* of the MS. described under No. 250.

Complete.

A treatise bearing on Advaita Vēdāntā containing 13 stanzas in Venbā metre, in which a Guru imparts spiritual wisdom to his disciple. Two stanzas of Pattinattu Pillai are incorporated in this work.

Beginning :

குருமொழிவெண்பா.

முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழா
யப்பாழு மாதியந் தம்பாழா—யப்பாழே
சும்மா [யி](வி)ருக்கச் சுகந்தா(?)யேகுருவே
யம்மா [யி](வி)னிப்பிறவா மல். (க)

நானிருந்த பாழ்மனையை [ஞ](நா)ளளவே கைக்கொண்டாய்
நீயிருந்த பாழ்மனையை நீதந்தாய்—நேரே
கடக்க(க்) குதிக்கக் காலமாண் டடையக்
[கு](கொ)டுக்கப் பிறப்பான் குரு. (உ)

End :

காசித் துறையைக் கரைகடந்து காணமல்
வாசியைக் கொண்டாட மாட்டாமல்—பேசித்
தலைவள(ர்)த்துக் கூத்தாடி(த்) தாவடங்கள் பூண்டு
அலைவதினு மென்னு மடா. (யஙு)

(த-பு.)—

இது, அத்வைத மதத்தைச் சார்ந்ததெனத் தோற்றுகிறது. இதில், குரு, தன்னுடைய சீடனுக்கு ஞானமார்க்கத்தை உபதேசித்து நல்வழிப்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. பதின்மூன்று வெண்பாக்களடங்கியது. இதி

லுள்ள "ஆரூராரிங்கிருக்க" "ஆவியொடு காய"மென்னும் வெண்டாக்களிரண்டும் பட்டினத்தார் பிரபந்தத்தைச் சேர்ந்தன." நடை நன்றாகவுள்ளது. இயற்றியவர் இன்னாரெனத் தெரியவில்லை.

No. 1794. கோயில்நான்மணிமாலை.

KŌILNĀNMAṆIMĀLAI.

Pages, 72. Lines, 10 on a page.

Begins on fol. 1*a* of the MS. described under No. 1143 ante.

Complete.

A eulogy on God Śiva worshipped under the name Naṭarāja in the shrine at Cidambaram: by Paṭṭinattu Piḷḷai. The work has been printed.

Beginning:

திருச்சிற்றம்பலம். சிதம்பர நான்மணிமாலை.

பூமே லயனறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவாம்—பாமேவு
மேத்துகந்தான் றில்லை யிடத்துகந்தா னம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. (க)

End:

சதுமுகன் றந்தைக்குக் கதிர்விடு கடவு
ளா[ளி](ழி)கொடுத்த பேரருள் போற்றி
முயற்சிகொடு பணிந்த வியக்கர்தங் கோனுக்கு
மாநிதி யிரண்டு மானப் பெருவளத்
தளகை யொன்றுந் தளர்வின்றி நிறுவிய
செல்வங் கொடுத்த செல்வம் போற்றி

(* * * *)

தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொ னம்பலம் போற்றி யம்பலத்
தாடு நாடகம் போற்றி யென்றுங்
கென்றும் போற்றினு மென்றனக் கிறைவ
[யா] (வா)ற்றுசி(ல்)லேன் போற்றி யாயினும்
போற்றிபோற்றி [பு](பொ)லம்பூ வடிக்கே. (சம)

Colophon:

நான்மணிமாலை கனகாசலம் எழுதி முடிந்தது முற்றும்.

(கு-பு)—

இது சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் நடராசப்பெருமான் விஷயமானது. பட்டினத்துப் பிள்ளையார் இயற்றியது. மிக அழகானது. அச்சிடப்பட்டிருக்கிறது. இந்தப் பிரதியில் பூர்ணமாக இருக்கிறது.

No. 1795 சச்சிதானந்தவிளக்கம்.

SACCIDĀNANDAVIḶAKKAM

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 151*a* of the MS. described under No. 250.

Complete.

A treatise laying down that due meditation accompanied with a certain posture is conducive to the realization of Brahman. The name of the author is not known.

Beginning:

சச்சிதானந்தவிளக்கம்.

ஓங்கார மாவதென வென்று கே[ழ்க்](ட்)கி
  லுகாரமொன நகாரமொன்று மகாரமொன்று
பாங்காக நின்றிடு[ம்] மே பி[ற](ர)ணவ மாச்சு
  பாரிருந்த கருவலோ வாசான்சொல்வான்
வாங்காத வகாரமது காரத்திற் சேர்ந்து
  மன்னிநின்ற [யி](வி)டமல்லோ மகாரமாச்சு
தாங்காதே நின்றுரைக்க(க்) கேசரியைக் காட்டுஞ்
  சச்சிதானந்த மென்ற மவுனந்தானே. (க)

End;

முறையாகத் தானென்ற [ய](வ)ரசை போக்கி
  மூதண்ட வேதாந்த சாத்திரத்தை(ப்)பார்த்து
நிறையாக மனமொன்று லறிவிற் சேர்ந்து
  நி[ற்](ர்க்)குணத்தின் வீதியிலே நொந்துகூடி
மறையாக நின்றதொரு கேசரியைக் கண்டு
  மனமொட்டிக் கலந்ததிலே தானேதானாய்த்
துறையான விரவுப்கல[த்தா](ர்ரு) லல்லோ
  சொல்லவா ஞானியெனச் சொல்லலாமே. (ய)

(கு-பு.)—

இந்நூல் ஞானவிஷயமானது. கேசரி யென்னும் மூத்திரையைக்கூடி மவுனமாக இருப்பின் சச்சிதாநந்த ஸ்வரூபமாகவுள்ள பிரமத்தை எளிதில் அறியலாம் என்று கூறுவது. பத்துப் பாடல்களாலாகியது. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1796. சட்டைமுனிநாயனார் ஞானம்வெண்பா ஆத்திசூடி.

SAṬṬAIMUNINĀYANĀR ÑĀNAMVEṆBĀ ĀTTISŪDI.

Pages, 8. Lines, 6 on a page.

Begins on fol. 52*a* of the MS. described under No. 802.

Incomplete; contains 28 stanzas only.

Same work as Āttisūdiveṇbā described under R. No. 175(*m*) and 280(*e*) of the Triennial Catalogue of MSS.

(த-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 175(*m*), 280(*e*) நம்பர்களில் "ஆத்திசூடி வெண்பா" என்னும் பெயருடன் வந்துள்ளதே. இதன் தலைப்பில் சட்டைமுனி நாயனார் ஞானம் வெண்பா—ஆத்திசூடி யென்று குறித்திருப்பதால் அப்பெயரால் வெளியிடப்பட்டது. இந்தப் பிரதியில் 28 வெண்பாக்கள் உள. ஆதலின் முற்றுப்பெறவில்லை.

No. 1797. சித்திரவெண்பா.

CITTIRAVEṆBĀ.

Pages, 13. Lines, 6 on a page.

Begins on fol. 164*a* of the MS. described under No. 250.

Complete in 29 stanzas of Veṇbā metre. A treatise bearing on Śaiva Vēdānta. The name of the author is not given.

Beginning:

அத்தி முகனே யறுமுக வன்துணைவா
வெ[த்தி](ற்றி) விநாயகனே விண்ணப்பம்—நித்[தியமாய்](தம்)
பரத்தி லடையாமல் பாழ்போன [ஞ](நா)னு
மறித்தெட்டுட் சேரவே வை. (௧)

வைப்பா யி[று](ரு)தயத்தில் மாறாத் தியானமது
செப்பாப் பொருளாந் திருவடியை—முப்பாழ்
கடந்த பொருள்மூலங் காரணமா[மாய்]க் கினைமேல்
அடர்ந்துநடங் கண்டிரு நீ யங்[கே](கு). (௨)

End:

மெய்யாய்ப் பிரணவத்தை மேவிப் புணர்வோர்க்கு
அய்யமறுத் தானந்த மாக்குமே—உய்ய
மனஞ்சென் றடைந்து(?) மாறாத் தியானமா
யினஞ்சேர்ந்து நின்ற [யி](வி)டம். (௨௮)

[மி](இ)டமான மூலத் தெழுந்தசுட ராகி(க்)
குடவயிர னின்ற குறைகே[ளு](ள்)—அடைய
விழுங்கி வரும்பிறவி வேரறுத்து விட்டான்
அழுங்காத வத்தி முகன். (௨௯)

குருவே துணை.

(த-பு.)—

இந்நூல் சைவ வேதாந்த விஷயமானது. அந்தாதித் தொடையிலமைந்த இருபத்தொன்பது வெண்பாக்களை யுடையது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது. சிற்சில விடத்துப் பிழையுமுண்டு.

No. 1798. ஞானவம்மானை.
ÑĀNAVAMMĀNAI.

Pages, 7. Lines, 8, 9 to a page.

Begins on fol. 16*a* of the MS. described under No. 1061.

Complete in 32 stanzas.

A treatise on Śaiva religion setting forth that the body and such other things are unreal and that spiritual knowledge alone is real. The name of the author is not given.

Beginning:

குஞ்சரக் கன்றினைக் குட்பிட்டே னம்மானை
கொள்ளைப் பிறப்பைக் குலைத்திட்டே னம்மானை
யஞ்சினேன் வஞ்சப் பிறப்பினுக் கம்மானை
யாகம்போய்க் கூற்றுவ னனதே யம்மானை. (க)

* * * *

* * * *

தன்பாதஞ் சென்னிமேற் றந்தானே னம்மானை
தான்மேலிட் டெல்லாமுந் தானானா னம்மானை
என்போதங் கீழிட் டிறப்பித்தா னம்மானை
யான்போன தென்னிலே யேகாந்தி யம்மானை. (எ)

End:

சேரச் சிவமாகி வேறற்றே னம்மானை
சித்தாகி வெற்றட லானேன்கா ணம்மானை
பாரப் பிர[வ](ப)ஞ்ச நீ[ற்றே](த்தே)ன்கா ணம்மானை
பரானந்த வெள்ளம் படிந்தேன்கா ணம்மானை. (கூக)

தேசிகன் றித்திரிப் போதொணு தம்மானை
தேசிக னம்மானை யான்கண்ட தெய்வமும்
மாசிலா மெய்கண்ட தேவன்கா ணம்மானை
யம்மானை யம்மானை யம்மானை யம்மானை. (கூஉ)

Colophon:

ஞானவம்மானை முற்றும்.

கச்சியப்ப தேவனடி யுச்சியுளம் வைப்பாம்.

(கு-பு.)—

இது சைவசமயத்தைச் சார்ந்தது. உடல் முதலியன பொய்ப்பொருளென்றும், உணர் வொன்றே உண்மைப் பொருளென்றும், அறிவுடையொருவன் தன்னனுபவத்தாலுணர்ந்து, ஏனையோர்க்குக் கூறுவதாக இந்நூலமைந்துள்ளது. காப்பு உட்பட முப்பத்திரண்டு பாடல்களை யுடையது. நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1799. திருமயிலைக் கபாலீசர்தோத்திரக்கீர்த்தனை.

TIRUMAYILAI KAPĀLĪSARTŌTTIRAKKĪRTTANAI.

Substance, palm-leaf. Size, 11¼ × 1 inches. Pages, 3. Lines, 4 on a page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Begins on fol. 18*a*. The other works herein are Aṅgālammai-padikam 1*a*. Tiruñānasambandartōttirakkīrttanai 7*a*. Tiruñānasambandartudi 13*a*.

Complete.

A eulogy on Kapālēśvara, a form of Śiva, worshipped in the shrine at Mylāpore. In the eulogy the grace of Śiva as shown to the four Śaiva devotees is indicated.

Beginning:

திருமயிலைக்கபாலீசர்பேரில் கீர்த்தனை.

இராகம்—ஆனந்தபைரவி.

(பல்லவி.)

சூலபாணியர்கபாலீசர் - இவர் - தொண்டர்களுக்கு மகா நேசர்.

(அநுபல்லவி.)

ஞாலமெல்லாம்புகழுந் திருமயிலாபுரி

நண்ணுங்கற்பகவல்லி—நாயகராந்திரி சூலபாணியர்.

(சரணங்கள்.)

மெய்யன்பரெனும்வாதவூரருக்காய் - மேலெழுள்ளங்களிகூரச்

செய்யுந்திருவிளையாட்டெல்லாமறிவீர்களே .

பொய்யலவிவரால் மெய்ப் போதம் பெறுவீர்களே சூலபாணியர்.

End:

திருஞானசம்பந்தமூர்த்தி - உள்ளந்

தெரிந்தவரெண்ணமெலாம்பூர்த்தி

பரிவாயியற்றிப்பூம் - பாவைக்கிரந்தாரே

பெருஞ்சீர்வாயிலார்முத்தி பெறவிடைமேல்வந்தாரே.

சூலபாணியர்கபாலீசர் - இவர் - தொண்டர்களுக்கு மகா நேசர்.

(கு-பு.)—

இது மயிலாப்பூரிற் கோயில்கொண்டிருக்கும் கபாலீசுவரமூர்த்தி விஷயமான தோத்திரம். ஈசுவரன், சைவசமய குரவர் நால்வருக்கும் அருளிய தன்மையை வியந்து தோத்திரஞ் செய்யப்பட்டுளது. கீர்த்தன மென்னும் இசைப்பாட்டாலாயது. இயற்றியவர் பெயர் முதலியன தெரியவில்லை. இந்நூல் இந்தப் பிரதியில் முற்றுமுள்ளது.

No. 1800. திருமூலர்தியானக்குறிப்பு.
TIRUMŪLARDHYĀNAKKURIPPU.

Pages, 14. Lines, 7 on a page.

Begins on fol. 130*a* of the MS. described under No. 250.

Describes the self-realization of Tirumūlar as the result of contemplation. Of the 2- stanzas, one stanza, viz., the first alone is found in the printed edition of Tirumandiram of Tirumūlar; the other stanzas are not found therein.

Complete.

Beginning:

நாட்டமிரண்டும் நடுமூக்கில்வைத்திட
வாட்டமுமில்லை மனக்குமழிவில்லை
யோட்டமுமில்லை யுணர்வில்லைத்தா[நி](னி)ல்லை
தேட்ட முமில்லை சிவ[நி](னி)வனுமே. (க)

நாமே கண்(ண்)[ெ]ரண்டு நாசிநு[னி](னி)வைத்துப்
போமேயறிவைப்புரு(ரு)ம[ய்]யந் தாபித்து
ஓமேயிருக்க வுலகெல்லாந் தன்னுள்ளாந்
தாமேசிவமல்லால் தனித்தசிவமில்லையே. (உ)

End:

வைத்த திருவடிவாமூ மென்னுச்சிமேல்
நித்தலுமங்கே நி[ன](னை)வைக்கொளுவிட(ச்)
சித்தந்தெ(ழி)[ளி]ந்து சிவமயமாய்நின்றங்
கத்தனை(க)கண்டேனுங் காரமாண்டு[டு](ட)தே. (உஎ)

ஆங்காரமாண்[டு](ட)து புத்திதனைமொன்றாய்(ச்)
சாங்காலநாய்வீட்டில் சடைக்குற்றெறும்புபோல்
ஓங்கார மூலம்விட்டுச்சியினுட்கொண்டு
நீங்காமற்கொண்டுநிற்[க்]கும் நயனமே. (உஅ)

Colophon:

திருமூலர்தியானக்குறிப்பு திருமந்திர முற்றும்.

(கு-பு.) —

இந்நூலுக்கு, திருமூலநாயனார் தியானக்குறிப்பு என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆயினும் இதன முதலிலுள்ள நாட்டமிரண்டு மென்னும் செய்யுள் ஒன்றே திருமந்திரத்தில் (அச்சிட்டநூலில்) காணப்படுகிறது. மற்றை இருபத்தேழு செய்யுட்களும் காணப்படவில்லை. ஆயினும் செய்யுளை நன்கு ஆராய்ந்தால் திருமூலநாயனார் வாக்கென்றே சொல்லவிடமுண்டு. இந்தப் பிரதியில் இந்நூல் முற்றுமிருக்கிறது

No. 1801. நெல்லைக்குமாரசுவாமிதோத்திரம்.
NELLAIKKUMĀRASUVĀMITŌTTIRAM.

Pages, 10. Lines, 7 on a page.

Begins on fol. 94*a* of the MS. described under No. 83.

A eulogy on Nellaikkumārasuvāmi, a Śaivā Guru who presided over the Iśāna Mutt (attached to Tiruvāvaḍuturai Mutt) in Tinnevelly. The name of the author is not given.

Complete in 13 stanzas.

Beginning:

சீர்தங்கு நின்னடித் தொழும்புசெய் தகண்டமாய்ச்
செறிந்தபா வெளியி னூடு
தெ[வு](வி)ட்டாத பேரின்பம் வாய்மடுத் தருந்தியே
தேக்கிட் டிருக்குமடியார்
ஏர்தங்கு செல்வக் குழாத்தோ டிருந்துநா
னிருவினைக் கட்ட றுத்து
னேகாந்த ஞானநி ராலம்ப வாரியை
யினிதுண் டிருப்ப தென்றோ
வார்தங்கு கொங்கை கௌ[வு]ரிமுன் பசுவான
வடிவந் தவிர்த்தணைத்த
மாசிலா மணியெங்கண் ஞானதே சிகனுறை[ர](ற)யு
மருமலர்ச் சோலைவேலி
நீர்தங்கு கழனிசூ ழாவடு துறைக்குள்வளர்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
நி[ற](ன்)மலா நந்தகுருவே. (க)

End:

உன்பெருங் கருணையை மறந்துமல மயமாகி
யொளியிழந் தறிவுமாழ்கி
யுமிழுமு நெல்லெனக் களிம்புதோய் செம்பென்ன
வுவருடை பளக்க ரென்ன
வன்பெரும் பாந்தள்வாய் மணியெனத் தீயுண்ட
வல்லிரும் பென்ன நாளு
மறைவுண்ட வென்னையுங் கருணையாற் சகலத்தில்
வருவித்து வினைவயத்தால்
இன்பதுன் பங்களைத் துய்ப்பித்து மலபாக
மெய்துமா றறிந்து குருவா
யெழுந்தருளி வந்துதிரு வடிசூட்டி ஞானநிலை
யிதுவென்று காட்டியாண்ட
நின்பெருங் கருணையினை யென்னென்று சொல்லுவேன்
நெல்லைக் குமாரசுவாமி
நித்தபரி பூரண வகண்டவடி வாய்நின்ற
நி[ற்](ன்) மலா நந்தகுருவே. (எ)

மருண்மூடிக் கதியிழந்து ச[ை]மய நூலின்
வழிபிதற்றித் திரிந்துழலு முயிர்களெல்லா
மிருணீங்கிக் கண்விழிப்பச் சைவ வாய்மை
யெழில்பெருகத் தென்றுறைசை நமச்சிவாயன்

பொருணீடும் புகழ்விளங்கப்புலவர் போற்ற(ப்)
பூவுலகி லவதரித்த ஞானபானு
தெருணீடும் புகழ்நெல்லைக் குமாரசுவாமி
செய்யதளிர்(ச்) சீறடியென்சிரமேற் கொள்வாம். (க)

* * * *

செங்கனிவாய்க் குறுங்கையு நதிருமுகமண்
டலத்தழகுஞ் சிவந்த தாளும்
பொங்கியருள் பழுத்தனைய நயமொழியுஞ்
சிவவேடப் பொலிவு மாகி(க்)
கொங்கலர்பூம் பொழில்புடைசூழ் துறைசைநகர்
வருநெல்லைக் குமாரசுவாமி
மங்கலமா யிருந்தருளுந் திருக்கோல
மறந்தாலு மறக்கொ ணாதே. (௩)

குருவே துணை.

(கு-பு.)—

இந்நூல் 'நெல்லைக் குமாரசுவாமி' என்பவரது தோத்திரரூபமாக அமைந்தது. 'நெல்லைக்குமாரசுவாமி, நித்தபரிபூரண வகண்டவடிவாய் நின்ற நின்மலானந்த குருவே' என்பதை மகுடமாக உடைய பத்துப் பாடல்களும், வேறு மூன்று பாடல்களுமாகிய பதின்மூன்று பாடல்களாலாகியது. இவர் திருநெல்வேலியில் (திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த) ஈசானமடத்தில் இருந்தவரென்று தெரிகிறது. இந்நூலாசிரியர் இன்னாரெனத் தெரியவில்லை. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1802 பல தேவர்கள் துதி.

PALA DĒVARKAḶ TUDI.

Pages, 7. Lines, 10 on a page.

Begins on fol. 74*a* of the MS. described under No. 270.

Contains 10 stanzas.

A eulogy on Dakṣiṇāmūrti, Tirumūladēvar and Subrahmaṇya.

The work may more appropriately be called Mūvartudi.

Beginning :

மணிகண்டா நின்னை மருவடியேன் பாசப்
பிணிகண்டா வாவென்று பேராய்—நணிநின்ற
பூரண னென்னுமம் பொருந்தாதவைக் குளவாம்
பேரறிவும் போமே பிரிந்து. (க)

End :

பணிகைக்குக் கங்கண மாக்கொண்ட சங்கரன் பாலுதித்தோன்
றணிக்கைக்கு நாயகனாகிய சண்முகன் றன்னை நெஞ்சே
யெணிகைக்குவித்திரந் தேத்திநின்றாடி யிறைஞ் சுவையேல்
மணிகைக்கு வந்ததெனக்காட்டும் பேரின்பை வாழ்குதுமே. (ய)

(கு-பு.)—

இந்நூல், தக்ஷிணாமூர்த்தி, திருமூலதேவர், சண்முகன் ஆகிய மூவர்களின் தோத்திர ரூபமான பத்துப் பாடல்களையுடையது. பலதேவர்துதி யென்றதை மூவர் துதி யென்றலே பொருத்தமாகவுள்ளது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1803. பாலையானந்தசுவாமிகள்ஞானக்கும்மி.

PĀLAYĀNANDASVĀMIGAḶJÑĀNAKKUMMI.

Pages, 53. Lines, 7 on a page.

Begins on fol. 30*a* of the MS. described under No. 250.

Complete in 185 stanzas.

Kummi songs of a philosophical nature. The name of the author appears to be Pālayānandasvāmi.

Beginning:

பாலையானந்த சுவாமியார் ஞானக்கும்மி பாடல்.
சீர்மேவு ஞானவடிவான பரதேசிகன் சற்குரு தன்னருளால்
பார்மீதில் ஞானக்கும்மிபாட(ச்) சிவபாலன் கணபதி காப்பாமே. (க)

அம்பிகைவாலை பதம்போற்றி யருளானந்தக் கும்மித் தமிழ்பாட(த்)
தும்பிமுகனுக் கிளையவனுஞ் சிவசுப்பிரமணியனுங் காப்பாமே (உ)

நாலாபேதமு மோராறும் வெகு[ஞ](நா)னுபேதமு நின்றுனை
மேலாய் போற்றி(க்) கு(ம்)மிப்பாட(ச்) செந்தில்வேலவர் தன்பதங்
[காப்பாமே (ங)

தாரிலுயர் மதுராபுரியில் வாலைதாசன் சொலுங்கும் மிப்பாடலுக்கு
மேருவதனடி மூலமுக்கோண விநாயகனார் பதங் காப்பாமே (ச)
ஆதியுமந்தமு மொன்றாகி வளரண்ட பிண்டமுமிரண்டாகிச்
சாதிபலபலவேறாகி நின்ற தத்துவங்கேளடி ஞானப்பெண்ணே (ரு)

தேகமனைமலப் பாண்டமதில் சிற்பரம்வந்திடு முற்பனத்தை
யோகமென்றுந் தமி[ள்](ழ்)ப்பாடமன முகந்து கேளடி ஞானப்பெண்
[ணே (சா)
ஏகவெளிப்பெரும் பட்டணமாமதிலேதோ சித்தனொருவனுண்டாம்.

End:

சொல்லினுங்கல்லினு நில்லாதே பிரமஞ் சோதியை யாதியை(த்)தூ[ய்]
[வெளியை
வல்லதைத[ற்ப்](த்)பிரகாசமவுனத்தின் வகையறிந்து[க்]கொள் ஞானப்பெ
[ண்ணே (௧அ௩)
அறிந்து[க்]கொண்ட பெரியோர்கள் பதம[ற்](ர்ச்)சனை செய்து[க்]கும்மித்த
[மிழைப்
பிறிந்திடாமல்[னூத்தெ](நூற்றெ)ண்பத்தைஞ்சு கண்ணி பேசினே சற்குரு
[தான்வாழி (௧அ௪)
சற்குருபாதமிகவாழி வாலை சுவாமிதமிழ் நிதந்தான்வாழி
நற்குண ஞானக்கும்மித்தமிழ்க[த்த](ற்ற)வர்ஞான நெறி[யை](யும்) மிக
[வாழி (௧அ௫)

(கு-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கும்மியென்னு மொருவகையிசைப் பாட்டாலாயது. ஆசிரியர் பாலையாநந்தசுவாமிகள் எனத் தெரிகிறது. 185 கண்ணிகளையுடையது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1804. மச்சேந்திரய்யர்ஞானக்கலிப்பா.

MACCĒNDIRAIYARÑĀNAKKALIPPĀ.

Pages, 15. Lines, 8 on a page.

Begins on fol. 156a of the MS. described under No. 250.

Complete in 20 stanzas.

Similar to the work described under No. 1795 ante ; the author appears to be Maccēndrar.

Beginning:

நெட்டுக்கொண்ட சடத்துக்குள்ளாரென்று
நின்றவன்னி ரவிசோம(ந)(னெ)ன்றல்லோ
கட்டிக்கொண்டடி வாயுவைப்பூரித்து(க்)
கலங்கிநின்று தவிப்பாருலகத்தோர்
பட்டு(ப்)பட்டுத் தி[ரு](ரி)ந்தாலுமென்பலன்
பா[ற்](ர்)க்கப பா[ற்](ர்)க்கமனமானமாய்கையால்
தெட்டுப் பண்ணி மயக்குந் திரோதகை
[சி](செ)கத்துக்காலயஞ் சிந்தையில் கண்டியே (க)

சிந்தைகூர்ந்து திரோதாயிமாயத்தைச்
சே(ர்)ந்தறிந்து செகமித்தையென்று நீ.
தந்தைதாயையறிந்தே புருமய்யச்
சார்வில்நின்று நீசாதகமாய்ச் சென்று
விந்தையான குருபதமேல் நின்று
வீட்டில்வன்னிரவி சோமன்கூடிய
மந்தைவீதியில் சொலிக்குஞ்சிகாமணி
மருவுங்கேசரி கண்டு கொள்மா[ற்](ர்க்)கமே. (உ)

End:

[யி](இ) ல்லையில்லையிறப்பும் பிறப்புந்தா
னேதிருலிப்படியாச்சு தென்[ரு](ற)க்கால்
அல்லையென்ற திரோதாயிமாயத்தை
யக[த்தி](ற்றி)நின்று அதீதமவுனத்தில்
எல்லைகண்டு இருந்திடங்கேசரி
வெளிசுவார்த்தை தா[ன்]யேத்த[(னேற்ற)]ங்கடினங்காண்
இல்லையெல்லைப் டதிதாண்டி நினறது
சென்றபேர்க்கு இறப்ப[த்த](ற்று)நின்றதே. (உ0)

(த-பு.)—

இந்நூல் வேதாந்த விஷயமானது. கேசரி முதலிய முத்திரையுடன் யோகஞ் செய்யில் முத்தியடையலாமென்று கூறுவது. இயற்றியவர் மச்சேந்திரர் என்று இந்நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டதன்றி வேறு ஒன்றினாலும் விளங்கவில்லை. இந்தப் பிரதியில் இருபது பாடல்கள் உள்ளன.

No. 1805. மார்க்கசகாயர் துதி.

MĀRGASAHĀYARTUDI.

Pages, 10. Lines, 6 on a page.

Begins on fol. 4a of the MS. described under No. 1294.

Complete.

A eulogy in 11 stanzas on Mārgasahāyar a Śaiva guru, who lived in Virinchipuram. The composition seems good and the name of the author is not given. At the end there are a few words of a stanza which cannot be completely identified.

Beginning :

பதிபசு பாசமூன் றும் பரவுசீரடியார்க்கெல்லாம்
விதிவிதியாகக்காட்டி மெத்தவச்சிவானுபோகக்
கதிதரவேண்டிப்பாரிற் கருணையோர் வடிவாய்வந்த
சதுரனே வி[ரு](ரி)ஞ்சை மார்க்கசகாய சற்குருவே போற்றி. (க)

ஐந்துமாமுகமுநீத்[து அ](தே)யங்கைமாமழுவுநீத்துக்
கந்தரக்கடுவு நீத்துக்கயிலைமால் வரையுநீத்துப்
பந்தபாசங்கள் நீக்கப்பரன் குருவடிவாய்வந்த
சந்ததம்விரிஞ்சை மார்க்கசகாய சற்குருவே போற்றி. (உ)

End :

உருவெடுத்தின்னுள் தொட்டு முழன்றிடுமடியர்க்கன்பாய்த்
திருவருட்கருணைசெய்தே செவியில் மந்திரநவின்று
பரவுமைங்கலைகள் சுத்திபண்ணி மெய்ப்படிவங்காட்டிச்
சரணந்தந்தாளு மார்க்கசகாய சற்குருவே போற்றி. (யக)

சீர்பெற்ற வடியவர்கள் முகவனசமலர்வித்துத் திமோதையந்திமிர நீக்கிச் சிற்சமையமென்கின்ற கூகைகூட(டை)யவரு நிகழ்ஞானபானுவாகி

ஏர்பெற்ற நால்வேத வாறங்கமுபநிடத மினியசிவ சைவாகமமெண்கலைத் திரள்களுந் தெரிந்துதத்துவவிதமீ தெனக்கண்டு கொண்டே

பேர்பெற்ற சுத்த சித்தாந்த பரிபூரணப் பேரின்பவாரி யதனைப் பேசியடியார்களுக் கங்கையா[கமல](மலக)மெனப் பிரியாது காட்டிநிதமும்

சீர்பெற்ற வனதானஞ் . . . .

* * * *

கு°பு)—

இது விரிஞ்சிபுரத்திலிருந்த சைவகுருவாகிய மார்க்கசகாயரென்பவர் விஷயமானது. பதினொரு பாடல்களாலாயது. செய்யுட்கள் நல்ல நடையுடையன. இயற்றியவரின்னாரெனத் தெரியவில்லை.

இந்நூலின் பின்னர்க்குறிக்கப்பட்டுள்ள "சீர்பெற்ற" என்ற செய்யுளும் அன்னோர் விஷயமானதென்றே தோற்றுகிறது. அபூர்த்தியாயிருக்கின்றமையிற் றுணியக்கூடவில்லை.

No. 1806. மாணிக்கசுவாமி வெண்பா.

MAṆIKKASVĀMI VEṆBĀ.

Substance, palm leaf. Size, $8\frac{3}{4} \times 1\frac{1}{2}$ inches. Pages, 20. Lines, 9 on page. Character, Tamil. Condition, fair. Appearance, old.

Complete

A treatise on Śaiva religion by Māṇikkasvāmi. It lays down that salvation is attainable only through spiritual knowledge and in no other way.

Beginning:

தன்னை யறிவித்தான் தானேதா னைபிரான்
என்னை யறிய வியம்புவித்தான்—பின்னையொரு
தேவாரங் கண்டிலேன் தென்னன் பெருந்துறையான்
லாவாவென் னுண்டவமக்கு(?) (க)
மெய்க்குருவைத் தேடும் வெறித்த வெளிகாட்டும்
பொய்க்குருவைத் தேடிநீ போகாதே—நெய்க்குருகு
நாணுமல் நாடுங்கால் நடுவனியிலேநிற்கும்
தோணுமற் கோணுங் குறி. (உ)
நாணிருந்த வா[ள](ம்)டனேயை நாள[மு](டை)வேகைக்கொண்
தாணிருந்த பா[ள்](ம்)மனேயைத் தானீ[ய்]ந்தான்—ஊனில் [டான்
கடுத்துக் கொதித்தெழுந்து கால் மண்டையடக்(?)
கொடுத்தப் பா(ர்)ப் பான (ங்)குரு. (ங)
என்றுன் சென்ன மெடுத்தி ரெடுத்தக்கால்
வான்காணு மீசனேயே வாழ்த்துகிலீர்—ஊன்காயத்
தோடும் பொருளை யுணர்கி லீ ரோரெழுத்தைத்
தேடும் பிறவியிற் சென்று. (ச)
ஆரா ய்டுக்கு(?)மன்பத்தோ ரட்சரமும்
போராகச் செய்யும் பெருந்தவமே—கூறுய் (?)
ஏகவெளி யாய் நிற்கு(?)மிதய கமலத்[தே](திலே)
ஆகமுமா மஞ்செழுத்து மாம். (ரு)

End:

நானென்றும் நீயென்றும் நாடின தொன்றென்றும்
ஏனென்ற தொன்று மியம்பக்கேள்—தானின்று
சொல்லுறது மாகிச் சுகமு மவனுகிப்
பல்விதங்க ளாகும் பரம். (ராடுக)
அணடரண் டங்க[ளுக்கு] டகனுவாகி நின்றபிரான்
தொண்டரெவர்க்குஞ் சுகமாகிக்—கண்டுக்கோ
அந்தக் கரண மடக்கி யதின் மூழ்கி(ப்)
பந்தம் பிரிந்திருப்பார் பார். (ராஉ0)
மாத்திரனா மாணிக்கவாசகனு ரன்பர்கெதி
எத்திவெண்பா [னூத்தி](நூற்றி)ருப துமே—போற்றினர்
நாலாம் பதம்பெறுவர் ஞானகுரு தானவனுன்
மேலாம் பதம் பிறவி மெய். (கஉக)

Colophon:

மாணிக்கசுவாமி வெண்பா எழுதி முற்றும். செயஸு ஆனிமீ ௰௫உ சுக்கிரவார நாள் எழுதினது. சுப்பராயன்.

(கு-பு.)—

இது சைவசமயத்தைச் சார்ந்தது. மாணிக்கசுவாமி என்ற பெயருள்ள ஒருவர் இயற்றினதாகத் தெரிகிறது. ஞானத்தாலன்றி சரியை முதலிய மூன்றாலும் மோட்சமடைய முடியாதென்பதை விளங்கக் கூறுவது. இவ்வெண்பாக்களில் சிற்சில விடத்துத் தளைதட்டுகின்றது. இந்தப் பிரதியில் இது பூர்த்தியாக உள்ளது.

No. 1807. மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை.
MĀṆIKKAVĀCAKAR ÑĀNATTAḺIŚAI.

Pages, 8. Lines, 8, 9 on a page.

Begins on Fol. 57*a* of the MS. described under No. 1214.

Same work as that described under R. No. 280(*h*/1) of the Triennial Catalogue of MSS., Vol. II, Part 2.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்திய காட்லாக் 280 (h/1) நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இது முற்றுமிருக்கிறது.

No. 1808. மாணிக்கவாசகர் ஞானத்தாழிசை.
MĀṆIKKAVĀCAKAR ÑĀNATTAḺIŚAI.

Substance, palm leaf. Size $9\frac{7}{8} \times 1\frac{1}{8}$ inches. Pages 4. Lines, 6, 7 on a page. Character, Tamil. Condition, fair. Appearance old.

Begins on Fol. 4*a*. The other work herein is Ahattiyar Bōdakam 1*a*.

Contains the first five stanzas.

Same work as the above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் முதல் 5 செய்யுட்களே உள்ளன.

No. 1809. மாணிக்கவாசகர் பதம்.
MĀṆIKKAVĀCAKAR PADAM.

Pages, 7. Lines, 6 on a page.

Begins on Fol. 188*a* of the MS. described under No. 802.

A note is made in the beginning of this Manuscript to the effect that the work is by Māṇikkavācakar, though the style of the composition does not warrant such a statement. The work is of inferior order and is philosophical in nature.

Beginning:

மாணிக்கவாசக[ா]ர் பாடின பதம்.

சிவன் துணை.

மனங்கலங்க(க்) கப்பல்[த்] திசைதப்பிப் போகாமல் வைத்துப் பிடித்திடுவ [கோன்

கரையோரம் வைத்துப் பிடித்திடுங்கள்

உங்க[ள்டெ](ளெ)ண் கலத்தினிக[ளு](ழு)மக[ா]ர[ா]ஞ் சேராமல்

எமக்கள்ளக் கப்பற்கா[ற](ர)ன் போ[ரு](ரா)டாமல்

End:

மாவிளங் கனிய[முர](மிர்)தமாரித்துளிகள் சொரியுமே

மாணிக்கமான வேல்[ப்]போலொருகைதான் ஒருகையாய்த்தெரியுமே

கூவிஞல்வந்தேனெ[ங்](ன்)குமே ய[முற்](மிர்த)க்

குமி[ளி](ழி)[ச்]கொண்டுகொண்[டியோ]டோங்குமேமனந்

சேவித்தாரிடத்தவரு(?)மே சின்னக்

குழந்தைவேலைப்போலெகுமிருக்குமே

அருண்மூலிகையொன்று காட்டிலிதா[ற](ரே)ன்ஊரும்

அடியார்க்கெல்லாம் நல்லவயித்தியமே.

(கு-பு.)—

இந்நூலின் தலைப்பில் "மாணிககவாசகர் பாடிய பதம்"—எனக் குறிக் கப்பட்டிருப்பினும், இது மாணிக்கவாசகர் வாக்கென்று தோற்றவில்லை. எளிய நடையாயிருத்தலோடு பிழைகளும் பொதிந்துள்ளன. இது இசைப் பாட்டுக்களுள் ஒன்றான கீர்த்தனை வகையிற் சேர்ந்தது. வேதாந்த விஷயமானது.

No. 1810. மாணிக்கவாசகர் பாடல்.

MĀṆIKKAVĀCAKAR PĀḌAL.

Page, 9. Lines, 5, 6 on a page.

Begins on Fol. 153a of the MS. described under No. 802.

Contains 15 stanzas.

A eulogy on God Śiva. Although a note in the beginning atributes the work to Māṇikkavācakar, the style of the composition does not warrant such a statement.

Beginning:

மாணிக்கவாசகர் பாடல்.

காயாமரத்தின் கனியாகி(க்) கனியிற்[க்]கொட்டை—யுள்ளாகி(த்)
தாயாயீரேழுலகுக்குந் தந்தையுமான த[ய்](யா)பரனே
[அ](ஆ)யாமறை[னு](நூ)ல்தனை வகுத்தவரனே யுன்றனடைக்கலங்காண்
பேயரவெங்கள் பெருமானே பித்தாவென்னையாளாயே. (க)

End:

நெருப்போவு[ந்த](ன்ற)ன் றிருமேனி
நீறே[ர](ற)பூசித்திரிவதெல்லாம்
பொருப்போவு[ந்த](ன்ற)னிருப்பிடந்தான்
புவியீரேழு புவனமெல்லாந்
தருப்போல்கிளைத்த(த்) தழைத்துநின்றேன்
சகலசிவத்துரூவுள்ளா[ற்]?
இருப்போவென்று வெளைக்கா[ற்]க்க[யீ]
வீசாவென்னையாளாயோ. (யச)

சமைத்த சடலத்தை மெய்யென்று
சாகப்பயந்து தடுமாறி
யி(ை)மத்துவிழித்து[யி](வி)ருப்போனே
யென்ன[யி](வி)(ை)டஞ்சலு[த்தோ](ற்றோ)னே
சுமத்தெண்டெறைக்களமான(?)கனி
தேன் சூலா[யி](ய்)(?)தனேயாலமுண்ட
அ(ை)மத்தாயெ[ந்தன](ன்ற)னங்கய[க்](ற்)கண்
ணம்மாவு[ந்க](ன்ற)னடைக்கலங்காண். (யரு)

(கு-பு)—

இது மாணிக்கவாசகர் பாடலென நூலின்முதலிற் குறிக்கப்பட்டிருக்கினும் அவர் வாக்கென்று சொல்லவிடமில்லை. எளிய நடையாயும் பிழை பொதிந்து மிருப்பதால் வேறொருவரால் பாடப்பட்டிருத்தல் வேண்டும். இப்பாடல்கள் பதினைந்தும் சிவபிரானுடைய தோத்திரரூபமாகவமைந்துள்ளன.

No. 1811. மூவரம்மானை.

MŪVARAMMĀNAI.

Pages, 49, Lines, 6 on a page.

Begins on Fol. 80*a* of the MS. described under No. 1125.

Complete.

A work containing stanzas in praise of God Viṣṇu, Vināyaka Śiva, Muruhakkaḍavuḷ and Pārvati. The work is however styled Mūvarammānai, both in the beginning and end. The first stanza of this work is found also in some other works.

Beginning:

காப்பு.

வேகமாய் நெறிசேரும் வினைகளும்
தாகபோகம் விடாத தளர்ச்சியுந்
சோகவாரியினால் வருந் துன்பமும்
போகயானை முகத்தனைப் போற்றுவாம்.
புந்திவணஞ்சூழும் பொருவில்லாப் பிள்ளையார்
தந்திமுகன் குடவயி[ற்]றன் சப்பாணியம்மானை
தந்திமுகன்குடவயி[ற்]றன் சப்பாணியாமாகில்
இந்தவயிற்றுக்கிரையெங்கேயம்மானை
இன்றென்றேயீசனிரக்கவுற்றானம்மானை. (௧)

தெள்ளுதமிழ்பெருகுந் திருமுட்டத்தெம்பெருமா
னுள்ளதிலமெல்லா முழுதுண்டாரம்மானை
உள்ளதிலமெல்லா முழுதுண்டாராமாகில்
[கள்ளன்]கள்ளனிவனென்று கட்டுவதென்னம்மானை
கட்டாரோயோரிற் கதிரொளித்தாலம்மானை. (௨)

திருச்சிரமாபுரவீசன் செட்டிமகட்காய்வேடந்
[துரு]'தரி)த்துமருத்துவத்தின் றாயானாரம்மானை
தரித்துமருத்துவத்தின் றாயானாராமாகில்
மருத்தெண்ணெய்ச்சிக்கன் றிமணவிவர்க்கேதம்மானை
மட்டுவார்குழலிருக்க மணமரிநேராலம்மானை. (௩)

End:

சற்குருவினாசனத்திற் சரியாகவேயிருந்து
தர்க்கமிடுமூடருக்குத் தவம்வருமோவம்மானை
தர்க்கமிடுமூடருக்குத் தவம்வருமேயாமாகில்
இப்புவியிலேநரக மெய்துவதேனம்மானை
ஏழுநரகில் வீழேயிருந்தார்காணம்மானை. (௧௪)

அந்தப் பசும்பொற்கிரி வாழாதிசத்தி நாதரவர்
வந்தபுலித்தோலுரித்தவல்லாளரம்மானை
வந்தபுலித்தோலுரித்தவல்லாளராமாகி
விந்தமலைமேலிருப்பதென்[ன](னையோ)வம்மானை
இருந்தார் மலையின்மகளின்பத்தாலம்மானை. (௧௫)

Colohon:

மூவரம்மானை முற்றிற்று.

(௩-பு.)—

இது சிவபெருமான், விநாயகர், முருகக்கடவுள், திருமால், அம்பிகை ஆகிய இவர்கள் விஷயமான நூல். இதை இயற்றியவர் பெயர் முதலியன விளங்கவில்லை, இந்தப்பிரதியில் இந்நூல் முற்றும் இருக்கிறது. நூலின தலைப்பிலும், இறுதியிலும் 'மூவரம்மானை' என்று இதற்குப் பெயர் குறிக்கப்பட்டிருப்பினும், இது மேற்குறித்த ஐவர் விஷயமாகவுள்ளது. இதன் முதலிலுள்ள "வேகமாய்நெறி" என்னுங் காப்புச்செய்யுள் வேறு நூல்களில் காணப்படுகிறது.

No. 1812. மூவரம்மானை.
MŪVARAMMĀNAI.

Pages, 15. Lines, 5 on a page

Begins on Fol. 1*a* of the MS. described under No. 1719.

Incomplete.

Same work as that described above.

(கு-பு.)—

இது முன்பிரதி போன்றது. இதில் 39 செய்யுட்களே உள. இவற்றின் பின் 2 ஏடுகளில் இரு நூலின் செய்யுட்களிற் சில, தொடர்பில்லாமல் எழுதப் பட்டுள்ளன. இடையே ஒரு பக்கம் எழுதாதுவிடப்பட்டிருத்தலின் 24—72 வரை உள்ள 4 பாடல்களும் இதில் இல்லை. பிரதி சிதிலமாகவிருக்கிறது.

No. 1813. மெய்ச்சுருக்கம் ஐம்பது.
MEICCURUKKAM AIMBADU.

Pages, 46. Lines, 7 on a page.

Begins on Fol. 184*a* of the MS. described under No. 250.

Complete.

Fifty-one stanzas of a philosophical nature. The work is attributed to Dakṣiṇāmūrti.

Beginning :

[தெ]த[ஷ்](ட்)சணாமூர்த்தியாரருளிச்செய்த
மெய்ச்சுருக்கம் [அன்] (ஐம்)பது.

குறுமுனியென் நந்தி குருபாத மு[ளக்](ட்)கொண்
டுறுதிபெற மெய்ச்சுருக்க மோதக்—குறுமுனியைக்
கொண்டாடிக் கொண் [டருளிக்](டு) குறிப்பறிந்து முப்பொருளைக்
கண்டார்க்குப் பூரணமே காப்பு.

அண்டமுதல் பிண்டமென்ற தெட்டினுலே
யாத்தானுமைப்பனு(ம்)மெண் டெட்டினுலே,
கண்டதொழிலாடுவது மெட்டினுலே
கனகாணு வாட்டமெல்லா மெட்டினுலே,
தொண்டுசெயும் வழிமுறைக[ள்]ளெட்டினுலே
சொல்லாத வுபதேச.மெட்டினுலே,
பண்டுறுதி விதியமைப்பு மெட்டினுலே
பாரமாய் வெளியான தெட்டுந்தானே. (க)

எட்[டு ரெ](டா)ண்டுங் கூட்டியல்லோ வயசு பத்தா
யிருந்தாளே யென்னுத்தாளழியாக் கன்னி,
கட்டழகியவள் வயசுபத்துக்குள்ளே
கற்பகம்போ லெனையீன்றுள நந் தவேளோ,
திட்டமுடன் யான்பிறந்தேன் ராசிகன்னி
சிவசிவா ந[ஷ்ஷ](ட்ச)த்திரஞ் சோதிசோதி,
விட்டகுறைபூருவ மாந்[.தி](த)சமி நாளில்
மெய்யான காரணமு மையன்பேரே. (உ)

End:

அறியலாம் பரப்பிரம சத்திரூப
மானந்தமதியமு[ற்](ர்)த பதியுந்தோ[ண](ன்ற),
அறியலாதே[ய](ம)கதி ராமயத்தின் சூ[ஷ்ச](க்ஷ்ம)
மப்பாலுமுப்பாமுக்கப்பால் நீயுங்,
குறியலாம் நி[ற்](ர்க)குணத்தின் குறியைக் காணக்
குறியறிய(ச்) சற்குணமா யுலகத்தோரே,
யறியலா மவரவர்கள் பேதாபேத
மறிந்த குருவுபதேச மருளுவாரே. (௩௰)

அருளானவருள் பெறவுங்குருவு மாவாய்
அட்டசித்தும் புரியட்டமெட்டிற் காண(ப்),
பொ[ஜ](ரு)ளானதொன்றுக்கு ளெட்[டெட்]டே யாடி(ப்)
போக்குவரத்துள் சூட்[ச](சும)மா(ய்)ச்சி பாதம்,
பொருளானதது கண்டு காட்சி கண்டு
பொய்யாமல் மெய்ச்சுருகக வையன் சொன்ன,
பொருளான பொருள்பெறவுமருளும் பெ[த்த](ற்றுப்)
போதறிவாயிருப்பார்கள் மெய்ச் சுருக்கமுறுறே. (௩௰க)

(கு-பு.)—

இந்நூல் ஞானவிஷயமானது. தட்சிணாமூர்த்தியியற்றியதாகக் கூறப்படுகிறது. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1814. சச்சிதானந்தமாலை.

SACCIDĀNANDAMĀLAI.

Pages 36. Lines, 5 on a page.

Begins on fol. 129 *a* of the MS. described under No. 802.

Complete.

A treatise extolling the greatness of Śiva conceived of as Sat, Cit and Ānanda. The work is written after the model of the stanzas of Tāyumānavar but the author is not known.

Beginning:

சச்[சு](சி)தானந்தம்.

கடகரியோன் திருத்தாளை(க்) கருணைதர(த்)துதிசெய்து
விகடசடவியனுலகில் விளம்புவதற்கினிதான
சகடநெடுமால்மருகன் தகுதிமிகுவிநாயகனை
விகடமிலாமலேதுதிக்க வேறுவினையகலுந்தானே. (க)

முச்சுடராகியொன்றாய் மூலைத்திடுஞ்சோதிபாத
மச்சுதனயனுங்காணு வகண்டமாயளவிலாத
சச்[சு](சி)தானந்தமான சற்குருபரனைப்பாட
மெ(ய்)ச்சுடருதயமான மேன்மையையுண்மைசெய்வாம். (உ)

கண்ணினில்மணியாய்நின்ற காரணகுருவைப்போ[த்தி](ற்றி)
வி[ன்றி](ண்ணி)னிலொளியே பார்த்துமெ(ய்க்)[யி]குருபரனைப்பாட
ம[ன்றினி](ண்ணி)னில்யார்க்கு ஞானவழிதனையுணர்ந்தோர்க்கெல்லா
மொன்றினிலொன்றாய்நின்ற வுண்மையையுணர்ந்துபாரீர். (௩)

(வேறு).

முத்தமாநின்றபர[ஞ](நா)தவொலிகீதமது
முச்சந்திவீதிநடுவில்
மும்மலமகற்றியொரு நி[ற்](ன்)மலசொரூபமாய்
முச்சுடரினுச்சிமுகப்பில்,
உத்தமர்தெரிபரிசுத்தமா வஷ்டதிசை
யூடாடிவெட்டவெளியி
லொளியாகிவிரிசுட[ரு](ரி)னுதையகிரியணையிலே
யொருநாலுமிருநாலுடன்,
நித்தமாய்நின்றபரிபூரணசதாசிவ
நிலைகொண்டசோதிமயமே
நின்மகிமைகண்டுளே தெண்டனிடுதொண்டர்தம்
நினைவுசற்றயராதவா,
சத்தமாநின்றமணிரத்நமுடிமகுடமே
தரவேணுமிதுசமயமே
தற்பராநந்தசபை நிஷ்களாநந்தசிவ
சச்சிதானந்தகுருவே. (௪)

End:

பரமுமிதுபொருளுமிது வழியுமிதுதெளிவுமிது
பதினாலுலோகமதிலே
பாசவினையாலறிவு மோசமேமோசமிது
பாழறிவு பரமானதே
உரமுமிருகாலொ(ளி)யிரவுபகலின்றியே
(யிஷ்டா)ட்சரமுமதிலே
யொளி(வெளி)யிலொளியாகியிடநிடதநடனமா
ஆழிவிதியாளியெனவே
சிரமகுடமுடியிலே கனக மன் . சையிலே
சிவஞானதீபமது பார்
திருமருவுசிவசோதிமதி பெருகுகருவீடு
தெரி[சி](ச)னைகளாகமுடியுஞ்,
சரமுமிதுகதிசேர்வைசகலகலையனுராக
சாயுச்சியப[ா]தமரு[ள்](ளு)வாய்
தற்பராநந்தசபை நிட்களாநந்தசிவ
சச்சிதானந்தகுருவே.

குருசாமி துணை.

(கு-பு.)—

இது சச்சிதானந்தமயமான சிவத்தின் தோத்திரமாகவமைந்துள்ளது. இதில் முப்பது பாடல்களேயிருக்கின்றன. இவை, தாயுமானவர் பாடல்க

னில் போக்கைத் தழுவியிருக்கின்றன. இயற்றியவரின்னாரெனத் தெரிய வில்லை.

No. 1815. சச்சிதானந்தமாலை.

SACCIDĀNANDAMĀLAI.

Pages, 34. Lines, 6 on a page.

Begins on fol. 48 *a* of the MS. described under No. 1159.

Complete.

Same work as the above, but without the first stanza therein given.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. அதிலுள்ள கடகரியோனென்று தொடங்குஞ் செய்யுள் இதிலில்லை. முற்றுமுள்ளது.

No. 1816. அகத்தியர் திட்சை விதி.

AKATTIYAYR DĪKṢAI VIDHI.

Substance, Palm-leaf. Size, 10¼ × 1 inches. Pages 110, Lines, 7 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Begins on fol. 121 *a*. The other works herein are Akattiyarpurāṇa-sūttiram 1*a*, Akattiyarpūjāvidhi 59 (*a*).

Complete.

Same work as that described under R. No. 9 (*c*) of the Triennial Catalogue of Tamil MSS., Vol. I.

(கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக்காட்லாக்கின் 9 (c) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் முற்றுமிருக்கிறது.

No. 1817. அகத்தியர் திட்சை விதி.

AKATTIYAR DĪKṢAI VIDHI.

Pages, 13, Lines, 6 on a page.

Begins on fol. 80 *a* of the MS. described under No. 1518.

Incomplete.

Same work as that described above.

(கு-பு.)—

இந்தப் பிரதி முன் பிரதியைப் போன்றது. இதில் 1—15 பாடல்களே உள்ளன. ஏடுகள் சிதைந்திருக்கின்றன.

No. 1818. அகத்தியர் தீட்சை விதி.
AKATTIYAR DĪKṢAI VIDHI.

Pages 14. Lines, 6 on a page.

Begins on fol. 92 *a* of the MS. described under No. 1490.

Incomplete.

Same work as the above.

(கு-பு.)—

இது முன் பிரதிபோன்றது. முற்றுப்பெறவில்லை.

No. 1819. அகத்தியர் பூஜைவிதி.
AKATTIYAR PŪJAIVIDHI.

Pages, 124. Lines, 6 on a page.

Begins on fol. 59*a* of the MS. described under No. 1816.

Complete.

Same work as that described under R. No. 9 (*b*) of the Triennial Catalogue of Mss, Vol. I, Part II.

(கு-பு.)—

இது மூவருடத்துக்காட்லாக்கின் 9 (b) நம்பரில் வந்துள்ளதே. இந்தப் பிரதியில் இந்நூல் முற்று மிருக்கிறது.

No. 1820. அகத்தியர் யோகம், ஆறு.
AKATTIYAR YŌGAM, ĀṞU.

Substance, Palm-leaf. Size, 9 ⅞ × 1¼ inches. Pages, 5. Lines, 6 on a page. Character, Tamil. Condition, Fair. Appearance, old.

Begins on fol. 1*a*. The other work herein is Māṇikkavācakar ñānattaḻiśai 4*a*.

Contains only 6 stanzas.

Apparently deals with the realization of the Supreme Being through Yōga. The work is attributed to Akattiyar but there is no authority for it excepting that it is so written in the beginning of the manuscript.

Beginning:

சொல்லு [கு வே] (கிறே)ன் சூ [ஷ்ஷ] (ட்சும)த்தின் மகிமைகேளு
சுருதிவெளிக் கெட்டாத சூட்சுமமப்பா,
வெல்லுவையோ சொல்வதற்கு விள்ளாய் விள்ளாய்
வேதாந்தம் சித்தாந்தம் பரனுக்குள்ளே,
அல்லுபகலற்ற மகமேருவுச்சி
யாதித்தன் சந்திரனின்ற வெளியில் நில்லு,
மல்லுகிறேன் மயிர்ப்பாலமுண்டு நேராய்
மறிப்பார்க்கு அகாரநடு கொம்புதானே. (க)

End :

நிலைத்துநின்று சுழிமுனையைக் கட்டி நின்றால்
நேராகத்துவாரத்தின் பளிச்சென்றாற்போ
விலைக் குமட்டாலெரித்தூற்றுந் தங்கம்போல(க்)
கம்பியெழும் பளிச்சென்று பிரகாசம் பொங்கும்,
துலைக்குழியால் நிலைக்குவந்து அமிர்த[ம்] முண்ணுஞ்,
சோதியாம் பராபரத்தின் செயலேதென்றால்,
அலைத்துவிட்டு ஆதியந்தமி[ல்] லாதிடத்தில்
அருந் [து] (தி) நிற்கக்கட்டினன் தனிடந்தான்காணே. (சு)

(கு-பு.)—

இது யோகாநுபவத்தைக்கூறுவது. தனிநூலாகத்தோற்றவில்லை. இதில் ஆறு செய்யுட்களேயுள்ளன. அகத்தியர் செய்ததாக நூலின் முதலிற் குறிக்கப்பட்டுள்ளதைத்தவிர வேறு ஆதாரமொன்றுந் தெரியவில்லை. செய்யுளிற் பிழைகளதிகம்.

No. 1821 கூர்மானந்தர் சூத்திரம், ஐம்பத்தொன்று.
KŪRMĀNANDAR SŪTTIRAM, AIMPATTONṞU.

Substance, Palm-leaf. Size, 10½ × 1¼ inches. Pages, 12. Lines, 7 on a page. Character, Tamil. Condition, Good. Appearance, old.

Begins on fol. 35*a*. The other work herein is Koṅgaṇanāyanār daṇḍakam 1*a*.

Complete.

Same work as that described under R. No. 267 (*o*) of the Triennial Catalogue of Mss., Vol I, Part 2.

கு-பு.)—

இந்நூல் மூவருடத்துக்காட்லாக்கின் 267 (0) நம்பர் பிரதியில் வந்துள்ளதே. இந்தப்பிரதியில் இது முற்று மிருக்கிறது.

No. 1822. கொங்கணர் வாக்கியம்.
KOṄGAṆAR VĀKKIYAM.

Pages, 22. Lines, 5 on a page.

Begins on fol. 118*a* of the MS. described under No. 802. Contains 27 stanzas.

A work on the attainment of Jñana (knowledge of the Supreme Brahman) through Yōga. Explains the Pañcākṣara also.

Beginning :

ஒச்சு நின்ற ஓ [ங்] (மதுதான்மண்)ணை யுண்ணு(ம்)
உருவியந்த மண்சென்று சலத்தையுண்ணும்,

ப[த்தி] (ற்றி) நின்று சலமதுதான் தீயை யுண்ணும்
பாங்கான தீசென்று காலையுண்ணும்,
வெற்றி நின்ற கால்சென்று விண்ணையுண்ணும்
விழுந்ததப்பா சடமென்றுவேதாந்தம் போச்சு,
முத்திநின்று கூடுவது எந்தக்காலம்
மூடரே மதுவையுண்டு மேலே பாரீர். (க)

பாரப்பா வகாரமது உகாரத்தைக்கொள்ளும்
பாங்கானவுகாரமது மகாரத்தைக்கொள்ளும்,
நேரப்பா நகாரமது விந்துவைத்தான் கொள்ளும்
நேரான விந்துவது நாதத்தை [த்தான்]க் கொள்ளும்,
சேரப்பா நாதமொத்துச் சத்தியைத்தான் கொள்ளும்
சேர்ந்து நின்ற சத்தியல்லோ சிவத்தைக்கொள்ளும்,
ஆரப்பாசிவன்றன்னை (ப்) பராபரந்தான் கொள்ளும்
பராபரத்தைக் கொண்டவித மறிகிலேனே. (உ)

End:

துறைவிட்டு (ச்) சூடு சுழன்றலைந்து காணுதவா திகோடி,
யறையொட்டி (ப்)பொத்தியதோர் போகிகோடி யம்மம்மா
மறையெட்டி யெட்டாத ஞானத்தோர்க்கு [பூசையில்லா,
மகத்தான சூதர் வித்தை மைந்தா கேளு
குறைபோட்ட விட்டகுறை வந்ததானல் கூருனரத்தினமுங் கூடுங்
காணே. (உஎ)

குருவேதுணை.

கொங்கணர்வாக்கியம் முற்றும்.

Colophon:

(தீ-பு.)—

இது யோகமார்க்கத்தால் ஞானமடையும்முறைமையையும், பஞ்சாட்சரத்தின் அமைதி முதலியவற்றையுங் கூறுவது. கொங்கணரியற்றியதாக நூலின் முதலிலு மிறுதியிலும் குறிக்கப்பட்டுள்ளது. இதில் இருபத்தேழு பாடல்களே யுள்ளன. நூல்முடிந்ததாகத் தோற்றவில்லை, வைத்தியநூல்கள் பல வியற்றியுள்ள கொங்கணரும் இங்கே குறித்துள்ள கொங்கணரும் ஒருவரோ, அன்றோ வென்பதும், இவர் பதினெண் சித்தருளொருவராவென்பதும் ஆராயத்தக்கன.

No. 1823. சிவயோக தீபிகை.

ŚIVAYŌGADĪPIKAI

Substance, Palm-leaf. Size, $3\frac{3}{4} \times 1\frac{5}{8}$ inches. Pages, 174. Lines, 10,11 on a page. Character, Tamil. Condition, much injured. Appearance, old. Complete.

A rendering in Tamil of the sanskrit work Śivayōgapradīpikā described under No. 4384 and 4385 of the D. C. S. MSS., Vol IX.

Beginning :

சிதம்பரசிவயோக தீபிகையான மூலமந்திரம்.

வெள்ளை வாரணப், பிள்ளையார்பத,
முள்ளுவார்மனக், கள்ளமாறுமே.
ஆனைமுகனுமுகனம்பிகைபொன்னம்பலவன்
ஞானகுருவாணியையுண்ணுடு .

சிவயோகதீபிகை.

ஸ்ரீசதாசிவயோகீசுவர . . , . க்கப் பட்டசிவயோக . . . . . ன் கின்ற யோக சாத்தி . . . . . தாயும் சாவதானமாகிற . . . . கிரு, ரதெப்படி யென்னிற் . . . . . யோகீசுரர்களுடைய மனசாகிறது தாமரைப்புட்பத்துக்கு வண்டுபோலவுங், காரணத்திரயங்களுக்குக் காரணமாக . . . . . யமாகியுஞ், சகுணநிர்க்குணமாகி(ற) த(த்)துவ சொரூபமாகியுஞ், செனனமரணங்களில்லாத சதாசிவலிங்க சொருபமாகிய குருவைத்தன் (மனசி)லே ஈசனைப் . . . ணுகிறேமென்று குருவை ந . . . . பண்ணிய . . . சதாசிவ யோகீசுரரானவர் சிவயோக தீபிகை யாகிற கிரந்தத்தை . . . . . னை பண்ணுகிறார். (க)

End :

இந்த சிவயோக தீபிகை . . . . . மகார . . . . மாயிருக்குமிதை யப்பியசிக்க வயி(ராக்)கியமுண்டானவனு யிந்திரிய நிக்கிரகம்பண்ணினவனுஞ், சிவனிடத்திலேயுங் குருவினிடத்திலேயு(ம் அசஞ்)சலமான புத்தியுண்டான சற்புருடனுக்குக்[கு] (கொ)டுக்கத்தக்கது.

* * * *

Colophon :

இந்தத் திறமுடைய சிவயோக தீபிகை யென்கிற கிரந்தமான உ௱அ௰எ சுலோகங்களு நானுவிதச் . . ர்த்தங்களோடே யஞ்சு படலங்க . . . . பட்டதென்று சொல்லி . . . த . . தாவனுக்கிரகம் பண்ணின . . . . . குருவேதுணை . . . . ப்படி சதாசிவ யோகீசுரராலோ . . . யோக விடையம் . . . . டகவித . . மானவஞ்சாம் படலமுற்றும்.

ஆகப் படலமஞ்சுக்கு, சுலோகம் உ௱அ௰எ.

கச்சியப்பதேசிகனை நச்சியுளம்வைப்பாம்.
சிவஞான தேசிகனைப் பவமா[ற்](றப்)பணிவாம்.

(கு-பு.)—

இது ஸம்ஸ்கிருத டிஸ்க்ரிப்டிவ் காட்லாக் 4384, 4385-ஆம் நம்பர்களில் வந்துள்ள "சிவயோகப்ர தீபிகா" என்பதன் மொழிபெயர்ப்பாகும். இந்நூல் வடமொழியில் ஐந்து படலங்களாலாயது. 280 சுலோகங்களுக்கு மேற்கொண்டது. சதாசிவ யோகீசுரர் என்பவராற் செய்யப்பட்டது. தமிழில் ஒவ்வொரு சுலோகத்தின் பொருளையும் நேரே மொழிபெயர்த்து, ஆங்காங்கு, சுலோகத்தின் எண்ணும் குறிக்கப்பட்டுளது. மொழிபெயர்த்தவரின்னாரெனத் தெரியவில்லை. இஃதொரு நல்ல நூல். இந்தப் பிரதி பூர்த்தியுடையது. மிகச் சிதைவுற்றிருக்கிறது. அச்சிடப்பட்டிருக்கிறது.

No. 1824 சிவயோகம்.
ŚIVAYŌGAM.

Pages, 10. Lines, 5 on a page.

Begins on fol. 26*a* of the MS. described under 1543.

Deals with Yōga. The name of the author is not known.

Contains only 10 stanzas.

Beginning:

சிவயோகம்.

பாரப்பா பதியளப்ப[யி](வி)[ன்னா](ந்நா)ல் வேணும்
பரையோகமென் பதற்கு மவுனம் வேணும்,
காரப்பா சயம்வேணுஞ் சித்திவேணுங்
களங்கமற்ற சறகுருவைக் காணவேணும்,
சாரப்பா சமாதி[கள்] பஞ்ச சமாதிவேணும்
சதிராக நந்தியு(டை)டநாட்டம் வேணும்,
ஆரப்பா வறிவர்க்ள் ஞான மா[ற்](ர்க்)க
மப்பனே பூரணத்தை ய[ழி](மு)த்திப்பாரே. (க)

End:

ஓதப்பா வொளிபோலாமுன்றன்றேகம்
ஒன்றுமில்லை பிடித்த(வி)டம் பொய்யாய்ப்போகும்,
நாதப்பா வண்டபகிரண்டமெல்(லாம்)
நாடலாமோடலா மநேகஞ்சித்தி,
நீதப்பா வாதாரமாறில் (வை)த்து(த்)
தப்பாத தேகமது கா[ப்]போற்காணும்,

. . . . . .

(கு-பு.)—
